மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகள் பெற்று பொது தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சி கட்டிடத்தை ஆக்கிரமித்தும் மற்றும் பணிக்கு இடையூறாகவும் உள்ளதால், HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகளை ஏலம் மூலம் தீர்வு செய்து மாநகராட்சிக்கு வருமானத்தை ஈட்டலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், தற்பொது e–ஏலத்தில் கோரியுள்ள உயர்ந்தபட்ச விலையானது தொழில்நுட்பகுழு மதிப்பீடு செய்த தொகையைவிட (+) 51.22 % அதிகமுள்ளதால் இந்த விலையானது ஏற்புடையதாக கருதப்படுவதால் 19 மெட்ரிக் டன்னுக்கு (19000 கிலோ) அளவு உள்ள பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகளை ஒரு தொகுப்பாக எடை அடிப்படையில் வாங்குவதற்கு ஏலத்தில் உயர்ந்த விலையான ரூ.7,40,000/– கோரிய ஏலதாரர் திருவாளர்கள். Yafeeqah

Steels,நிறுவனத்திற்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1) பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்டு பொது தொழிற்சாலையில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள உபயோகப்படுத்த இயலாத பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகள் 19 மெட்ரிக்டன் (19000 கிலோ) எடை அளவு பயனற்றவை என கழிவு செய்யவும்.

2) மேற்கண்ட 19 மெட்ரிக்டன் (19000 கிலோ) எடை அளவு பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகளை வாங்குவதற்கு திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் மின்னனு முறையில் "e" ஏலம் நடத்தப்பட்டு திருவாளர்கள். Yafeeqah Steels, அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.7,40,000/– விலையானது தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து நிர்ணயித்த ரூ.3,61,000/– மதிப்பை விட ரூ.3,79,000/–(51.22%) கூடுதலாக இருப்பதாலும் திருவாளர்கள். Yafeeqah Steels, நிறுவனத்திற்கு " உள்ளது உள்ளபடி" நிலையில் விற்பனை செய்யவும்.

3) மேற்கண்ட பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகள் விற்பனை செய்யும் பொருட்டு ஏற்கனவே இ ஏலத்தில் செலுத்தப்பட்ட ஏல முன் வைப்பு தொகையை 25% சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையுடன் ரூ.5,55,000/– விற்பனை வரி 5% மற்றும் வருமானவரி 1% அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள தொகைக்கு ஏற்ப தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் வரைவு காசோலையாக செலுத்தி அனுமதிப் பெற்ற பின்னர் பயனற்ற HDPE பிளாஸ்டிக் பின் கழிவுகளை "உள்ளது உள்ளபடி" திருவாளர்கள். Yafeeqah Steels, எடை கணக்கில் கொண்டு செல்ல அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.330/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 363/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

இ.பொ.து.பொ.து.ந.க.எண்.W5/235/2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.602/2015 **பொருள் எண்.12**

இயந்திரப் பொறியியல் துறை – பொதுதொழிற்சாலை தோரயமாக 936 கிலோ கிராம் எடையுள்ள அலுமினியம் ஒரே தொகுப்பாக பயனற்றது என கழிவு செய்வதற்கும் தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது – MSTC சேவை நிறுவனம் மூலம் "e" ஏலம் விடுவதற்கு மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டது– 25.09.2015 "e" ஏலம் நடைப்பெற்றது. அதிகபட்ச விலையாக ரூ.1,05,500/–க்கு திருவாளர்கள். Yafeeqah steels, நிறுவனத்தினர் ஏலம் கோரியுள்ளனர் – இந்நிறுவனத்திற்கு அலுமினிய கழிவுகளை வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சியின் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட பயனற்ற தோரயமாக 936 கிலோ கிராம் எடையுள்ள அலுமினியம் கழிவுகள் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும்பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இ, தி.க.மே./பொசு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 03.09.2015 அன்று பொது தொழிற்சாலையில் உள்ள பயனற்ற அலுமினியம் கழிவுகளை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் திறந்த வெளியில் பழுதடைந்து காணப்படுவதால் ஒரு கிலோ ரூ.70/–வீதம் தோராய எடை அளவான 936 கிலோ கிராமுக்கு மொத்த மதிப்பாக 936x70 (ரூ.65,520/–) தோரயமாக ரூ.66,000/– என நிர்ணயித்தும், இதனை ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் "e" ஏலம் மூலம் விற்பனை செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 25.09.2015 அன்று திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் மின்னனு முறையில் "e"– ஏலம் நடத்தப்படும் என்று சென்னை மாநகராட்சி செய்தி மலரிலும் மற்றும் தமிழ், ஆங்கிலம் செய்திதாள்களின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. 25.09.2015 அன்று "e" ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொழில்நுட்ப குழு மதிப்பீடு செய்த தொகை ரூ.	அதிகப்பட்ச விலை (Upset Value) ரூ.	e–ஏலத்தில் கோரிய உயர்ந்த விலை ரூ.	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	பயனற்ற தோரயமாக 936 கிலோ கிராம் எடை அளவுள்ள அலுமினியம் கழிவுகள் கொண்ட ஒரே தொகுப்பு (LOT)	66,000/–	75,000/–	1,05,500/–	திருவாளர்கள். Yafeeqah Steels

உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் M/s.yafeeqah steels அவர்கள் "e" ஏலத்தின் விதிகளின் படி ஏல முன் வைப்பு தொகை மற்றும் 25% முன் வைப்பு தொகையுடன் சேர்த்து திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் ரூ.26,375/– செலுத்தியுள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகையீனை சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டது. (செலுத்து சீட்டு எண். M/2015-16/0015592.)

மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் பயனற்ற அலுமினியம் கழிவுகள் பெற்று பொது தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சி கட்டிடத்தை ஆக்கிரமித்தும் மற்றும் பணிக்கு இடையூறாகவும் உள்ளதால், பயனற்ற கழிவுகளை ஏலம் மூலம் தீர்வு செய்து மாநகராட்சிக்கு வருமானத்தை ஈட்டலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், தற்பொது e–ஏலத்தில் கோரியுள்ள உயர்ந்தபட்ச விலையானது தொழில்நுட்பகுழு மதிப்பீடு செய்த தொகையைவிட + 37.44 % அதிகமுள்ளதால் இந்த விலையானது ஏற்புடையதாக கருதப்படுவதால் 936 கிலோ எடை அளவு உள்ள பயனற்ற அலுமினிய கழிவுகளை ஒரு தொகுப்பாக வாங்குவதற்கு ஏலத்தில் உயர்ந்த விலையான ரூ.1,05,500/– கோரிய ஏலதாரர் திருவாளர்கள். Yafeeqah Steels,நிறுவனத்திற்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

(1) பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்டு பொது தொழிற்சாலையில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள உபயோகப்படுத்த இயலாத பயனற்ற அலுமினிய பொருட்களை தோரயமாக 936 கிலோ எடை அளவு ஒரு தொகுப்பாக பயனற்றவை என கழிவு செய்யவும்.

(2) மேற்கண்ட பயனற்ற அலுமினிய கழிவுகளை தோரயமாக 936 கிலோ எடை அளவுள்ளதை ஒரு தொகுப்பாக வாங்குவதற்கு திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் மின்னனு முறையில் "e" ஏலம் நடத்தப்பட்டு திருவாளர்கள். Yafeeqah Steels, அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.1,05,500/– விலையானது தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து நிர்ணயித்த ரூ.66,000/– மதிப்பை விட ரூ.39,500/–(+37.44 %) கூடுதலாக இருப்பதாலும் திருவாளர்கள். Yafeeqah Steels, நிறுவனத்திற்கு " உள்ளது உள்ளபடி" நிலையில் விற்பனை செய்யவும்.

(3) மேற்கண்ட பயனற்ற அலுமினிய கழிவுகளை விற்பனை செய்யும்பொருட்டு ஏற்கனவே "e" ஏலத்தில் செலுத்தப்பட்ட ஏல முன் வைப்பு தொகையை 25% சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையான ரூ.79125/– விற்பனை வரி 5% மற்றும் வருமானவரி 1% அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள தொகைக்கு ஏற்ப தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் வரைவு காசோலையாக செலுத்தி அனுமதி பெற்ற பின்னர் பயனற்ற அலுமினிய கழிவுகளை "உள்ளது உள்ளபடி" திருவாளர்கள். Yafeeqah Steels, நிறுவனத்தினர் கொண்டு செல்லவும் அனுமதி வேண்டியும்.

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.328/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 361/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

இ.பொ.து.பொ.து.ந.க.எண். W5 /237 / 2014

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.603/2015 **பொருள் எண்.13**

இயந்திரப் பொறியியல் துறை – பொதுதொழிற்சாலை மற்றும் மத்திய லாரி நிலையம் – பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் கொண்ட ஒரே தொகுப்பு பயனற்றது என கழிவு செய்வதற்கும் தொழில்நுட்ப குழு அமைக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது – MSTC சேவை நிறுவனம் மூலம் "e" ஏலம் விடுவதற்கு மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டது– 25.09.2015 "e" ஏலம் நடைப்பெற்றது. அதிகபட்ச விலையாக ரூ.7,29,999/–க்கு திருவாளர்கள். M/s.Rajkamal Tyres, நிறுவனத்தினர் ஏலம் கோரியுள்ளனர் – இந்நிறுவனத்திற்கு பயனற்ற டயர்கள், டியூப்புகள் மற்றும் பிளாப்புகள் ஆகியவற்றை வழங்க அனுமதி

சென்னைமாநகராட்சியின் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும்பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இ, தி.க.மே./பொசு) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக்குழு 03.09.2015 அன்று பொது தொழிற்சாலையிலும் மத்திய லாரி நிலையத்திலும் உள்ள பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் திறந்த வெளியில் பழுதடைந்து காணப்படுவதால் ஒரு கனரக டயர் கழிவு விலை ரூ. 405/–வீதம் (தோராய மதிப்பு) 1224 எண்கள் மொத்த மதிப்பாக ரூ.4,95,720/– எனவும், ஒரு இலகுரக டயர் கழிவு விலை ரூ. 162/– வீதம் (தோராய மதிப்பு) 522 எண்கள் மொத்த மதிப்பாக ரூ.84,564 /– எனவும் ஒரு டியூப் கழிவு விலை ரூ. 32/– வீதம் (தோராய மதிப்பு) 423 எண்கள் மொத்த மதிப்பாக ரூ.13,536/– எனவும் மற்றும் ஒரு பிளாப் கழிவு விலை ரூ. 5/– வீதம் (தோராய மதிப்பு) 70 எண்கள் மொத்த மதிப்பாக ரூ.350/– ஒட்டு மொத்த விலையாக ரூ.5,94,170/– தோரயமாக ரூ.5,95,000/– என நிர்ணயித்தும், இதனை எண்ணிக்கை கணக்கில் ஒரே தொகுப்பாக " உள்ளது உள்ளபடி" மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் "e" ஏலம் மூலம் விற்பனை செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 25.09.2015 அன்று திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் மின்னனு முறையில் "e" நடத்தப்படும் என்று சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் மற்றும் தமிழ், ஆங்கிலம் செய்திதாள்களின் மூலம் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. 25.09.2015 அன்று "e" ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	விவரம்	தொழில்நுட்ப குழு செய்த தொகை மதிப்பீடுரூ.	அதிகப்பட்ச விலை (Upset Value) ரூ.	e ஏலத்தில் கோரியுள்ள உயர்ந்த விலை ரூ.	உயர்ந்த விலை கோரியுள்ள ஏலத்தாரர்
1	பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் அடங்கிய ஒரு தொகுப்பு	5,95,000/–	ரூ.6,00,000/–	7,29,999/–	திருவாளர்கள். .Rajkamal Tyres,

உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் திருவாளர்கள். .Rajkamal Tyres, நிறுவனத்தினர் "e" ஏலத்தின் விதிகளின்படி ஏல முன் வைப்பு தொகையாக ரூ.30000/– செலுத்தியுள்ளனர். மீதி தொகை 25% (ஏல முன் வைப்பு தொகையுடன் சேர்த்து) திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் ரூ.1,82,500/– செலுத்தயுள்ளனர். மேற்குறிப்பிட்ட தொகையீனை சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டு விட்டது. (செலுத்து சீட்டு எண். M/2015-16/0015658.)

மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் பெற்று பொது தொழிற்சாலையில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதால் மாநகராட்சி கட்டிடத்தை ஆக்கிரமித்தும், கொசுக்கள் உற்பத்தியாகுவதாலும் மற்றும் இதர பணிக்கு இடையூறாகவும் உள்ளதால், பயனற்ற டயர்கள், டியூப்புகள் மற்றும் ப்ளாப்புகளை ஏலம் மூலம் தீர்வு செய்து மாநகராட்சிக்கு வருமானத்தை ஈட்டலாம் என தீர்மானிக்கப்பட்டது. மேலும், தற்பொது e–ஏலத்தில் கோரியுள்ள உயர்ந்தபட்ச விலையானது தொழில்நுட்பகுழு மதிப்பீடு செய்த 18.49% அதிகமுள்ளதால் இந்த விலையானது ஏற்புடையதாக

கருதப்படுவதால் பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் ஒரு தொகுப்பாக வாங்குவதற்கு ஏலத்தில் உயர்ந்த விலையான ரூ.7,29,999/– கோரிய ஏலதாரர் திருவாளர்கள். .Rajkamal Tyres, நிறுவனத்திற்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1) பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்டு பொது தொழிற்சாலையில் சேர்த்து வைக்கப்பட்டுள்ள உபயோகப்படுத்த இயலாத பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் பயனற்றவை என கழிவு செய்து ஒரே தொகுப்பாக தீர்வு செய்யவும்.
2) மேற்கண்ட பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் வாங்குவதற்கு திருவாளர்கள். MSTC LTD., சேவை நிறுவனம் மூலம் மின்னனு முறையில் "e" ஏலம் நடத்தப்பட்டு திருவாளர்கள். .Rajkamal Tyres,அவர்கள் கோரிய உயர்ந்த விலை ரூ.7,29,999/– விலையானது தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து நிர்ணயித்த ரூ.6,00,000/–மதிப்பை விட ரூ.1,29,999/– (18.49%) கூடுதலாக இருப்பதாலும் திருவாளர்கள். .Rajkamal Tyres,நிறுவனத்திற் "உள்ளது உள்ளபடி" நிலையில் ஒரு தொகுப்பாக எண்ணிக்கை அடிப்படையில் விற்பனை செய்யவும்.
3) மேற்கண்ட பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் விற்பனை செய்யும்பொருட்டு ஏற்கனவே "e" ஏலத்தில் செலுத்தப்பட்ட ஏல முன் வைப்பு தொகையை 25% சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையுடன் ரூ.5,47,499/– விற்பனை வரி 5% மற்றும் வருமானவரி 1% அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள தொகைக்கு ஏற்ப தனித்தனியாக செலுத்துச்சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் வரைவு காசோலையாக செலுத்தி அனுமதிப் பெற்ற பின்னர் பயனற்ற வெவ்வேறு அளவு கொண்ட 1746 எண்கள் டயர்கள், 423 எண்கள் டியூப்புகள் மற்றும் 70 எண்கள் ப்ளாப்புகள் "உள்ளது உள்ளபடி" நிலையில் திருவாளர்கள். Rajkamal Tyres, ஒரு தொகுப்பாக கொண்டு செல்வதற்கு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.329/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 362/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/ 43373 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.604/2015 **பொருள் எண்.14**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மலேரியா பிரிவில், தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பணிபுரியும் திருமதி.A.சாமுண்டீஸ்வரி, அவர்கள் பொதுத்துறை சுற்றறிக்கையின்படி, 31.10.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

திருமதி.A.சாமுண்டீஸ்வரி, தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் அவர்களது பிறந்த தேதி 16.10.1957 என்பதால் இவருடைய வயது முதிர்வு ஓய்வு 31.10.2015 அன்று பிற்பகல் ஆகும்.

திருமதி.A.சாமுண்டீஸ்வரி, அவர்கள் சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் 21.12.1982 முதல் பூச்சியியல் உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு பூச்சியியல் உதவியாளர் பதவியில் 21.12.1982 முதல் பணி வரன்முறை முறைப்படுத்தப்பட்டு உள்ளது. 21.12.1984 முதல் தகுதி காண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

மேலும், தனியர் 23.10.2007 முதல் முதுநிலை பூச்சியியலராக பதவி உயர்வு பெற்றார். தனியருக்கு முதுநிலை பூச்சியியலர் பதவியில் 23.10.2007 முதல் பணிவரன் முறைப்படுத்த ஆணையர், அவர்களின் செயல்முறை ஆணை சு.து(ம)ந.க.எண்.எம்1/3683/2008, நாள்: 20.10.2008ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் தனியர் தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பதவி உயர்வு பெற்று 24.10.2014 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

தனியர் பணிபுரிந்த துறை / மண்டலகளிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை, நேர் செய்யப்படாத முன் பணம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், மேலும் இதன் விவரம் பின்னர் தெரியவரின், ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டு சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களின் 06.10.2015 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.

தனியர் பழைய மண்டலம்–4 பதிய மண்டலம்–6ல் பணிபுரிந்த காலத்தில் 2011–12ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.90 மற்றும் 2012–13ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.76ல் தனியர் மீது நிதி இழப்பீடு இல்லாத தணிக்கை தடைகள் தனிபொறுப்பில் நிலுவையாக உள்ளது என நிதி ஆலோசகர் அவர்களின் 19.10.2015 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட இவ்விரண்டு தணிக்கை தடை பத்திகளும் பெட்ரோல் மற்றும் டீசல் இருப்புப் பதிவேடு தணிக்கைக்கு உட்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ள தணிக்கை தடைகளாகும். இத்தணிக்கை தடைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளை தணிக்கை தடை நீக்கம் செய்வதற்காக தணிக்கைக்கு உட்படுத்தும் தருவாயில் நிதி இழப்பீடு ஏதேனும் ஏற்பட்டது தெரியவரின் அதனை தனியரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கலாம்.

தனியர் வகிக்கும் பதவி வகுப்பு –1Bன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், தனியரை 31.10.2015 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருமதி.ஹ.சாமுண்டீஸ்வரி, தலைமை பூச்சி தடுப்பு அலுவலர், சுகாதாரத்துறை மலேரியா பிரிவு அவர்கள் மீது நிலுவையில் உள்ள தணிக்கை பத்தி 90/2011–12 மற்றும் 76/2012–13ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளை தணிக்கை தடை நீக்கம் செய்வதற்காக தணிக்கைக்கு உட்படுத்தும்தருவாயில் நிதி இழப்பீடு ஏதேனும் ஏற்பட்டது தெரியவரின் அதனை தனியரின் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், இதுதவிர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு தொடர்பான தணிக்கை தடைகள் மற்றும் நீண்ட கால முன்பணத்தொகை சரி செய்யப்படாமல் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அத்தொகைக்கு தனியரை பொறுப்பாக்கி, தனியரது ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை, 31.10.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வில் ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதற்கு நியமனக்குழு அனுமதி அளித்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.கஎண்.ஈ1/38702/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.605/2015 **பொருள் எண்.15**

வயது முதிர்வு ஓய்வு அனுமதி

05.12.2014 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, செல்வி.ஆர்.சரண்யாகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.10.2015 பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார்.

14.09.2015 நாளிட்ட வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் கடிதத்தில், செல்வி.ஆர்.சரண்யாகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்கள், சென்னை மாநகராட்சியில் உதவி வரைவாளராக 05.10.1981 அன்று முதன்முதலில் பணியில் சேர்ந்துள்ளார் என்றும், தற்போது உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று,30.01.2014 முதல் வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அலுவலகத்தில் பணிபரிந்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர், சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்த கீழ் குறிப்பிட்டுள்ள அனைத்து துறை/மண்டலங்களிலிருந்து தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை மற்றும் முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள்/நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் விவரங்களை கோரி சான்றுகள் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை

வ. எண்	பதவி	மண்டலம்/துறைகள்	பணியாற்றிய காலம்	
			முதல்	வரை
1.	உதவி வரைவாளர்	பணித்துறை	05.10.1981	11.05.1990
2.	உதவி வரைவாளர்	கட்டிடத்துறை	11.05.1990	02.08.1998
3.	இளநிலை பொறியாளர்	கட்டிடத்துறை	03.08.1998	05.10.2003
4.	இளநிலை பொறியாளர்	பழைய மண்டலம்–3 (புதிய மண்டலம்–6)	06.10.2003	10.11.2008
5.	இளநிலை பொறியாளர்	கட்டிடத்துறை	11.11.2008	12.12.2012
6.	இளநிலை பொறியாளர்	மண்டலம்–6	13.12.2012	31.10.2013
7.	உதவி செயற் பொறியாளர்	கட்டிடத்துறை	01.11.2013	29.01.2014
8.	உதவி செயற் பொறியாளர்	மத்திய வட்டார அலுவலகம்	30.01.2014	இந்நாள் வரை)

செல்வி.ஆர்.சரண்யாகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள், உதவி வரைவாளர், இளநிலை பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகிய பதவிகளில் கட்டிடத்துறை மற்றும் பணித்தறைகளில் பணிபுரிந்த காலங்களில், தனியர் மீது தணிக்கைத்தடை, நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனவும், மேலும் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடை, நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் இருப்பது பின்னர் தெரியவரின், அதற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை வயது முதிர்வு ஓய்வில் விடுவிக்கலாம் எனவும், மண்டலம்–6ல் இளநிலை பொறியாளராக பணிபுரிந்த காலத்தில் பத்தி எண்.29, 2004 –2005 மற்றும் 2006–2007ஆம் ஆண்டு பத்தி எண்.42 தணிக்கை தடை நிலுவையில் உள்ளன என்றும் 13.12.2012 முதல் 31.10.2013 மற்றும் 2013–2014 ஆகிய ஆண்டுக்கான தணிக்கை புத்தகம் மண்டலம்–6ல் இல்லை எனவும் மண்டலம்–6லிருந்து பெறப்பட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

04.09.2015 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமம் , விழிப்பு அலுவலர் அவர்களின் குறிப்பில், செல்வி.ஆர்.சரண்யாகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லையனவும், நிலுவைத்தொகை எதுமில்லை என்று 10.09.2015 நாளிட்ட சான்று பெறப்பட்டுள்ளது.

தனியரின் பணிபதிவேட்டின்படி, தனியர் உதவி வரைவாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 05.10.1981 அன்றைய தேதியில் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு 04.10.1983 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் 33 ஆண்டுகளுக்கு மேலாக மொத்த பணிக்காலம் முடித்துள்ளார் எனவும் தெரியவருகிறது.

07.10.2015 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் கடிதத்தில், தனியர் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக துறை/மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2012–2013ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை என்றும், 2013–2014 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை பத்திகள் நிலுவை இருப்பின் அதன் பொறுப்பு பணியாரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மண்டலம்–6ல் இளநிலை பொறியாளராக பணிபுரிந்த காலத்தில் பத்தி எண்.29, 2004 –2005 மற்றும் 2006–2007ஆம் ஆண்டு பத்தி எண்.42 நிலுவையில் உள்ள இரண்டு பத்திகளும் நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (பத்தி எண்.29/ தொ.க.எண்.6/898/ஈ2/2010, நாள்.31.08.2010 மற்றும் பத்தி எண்.42/தொ.க.எண்.2358/ஈ2/2011, நாள்.12.08.2011).

13.10.2015 நாளிட்ட கடிதத்தில்,செல்வி.ஆர்.சரண்யகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்)அவர்கள் மீதான நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகள், சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவைகள் பின்னர் தெரியவருமாயின் அத்தொகையினை தனியரது ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து பிடித்தம் செய்துகொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.

தனியர் வகித்துவரும் உதவி செயற்பொறியாளர் பதவியானது, சென்னை மாநகராட்சி பணிவிதி வகுப்பு 2ன்கீழ் வருவதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, செல்வி.ஆர்.சரண்யகுமாரி, உதவி செயற்பொறியாளர், வட்டார துணை ஆணையர் அலுவலகம் (மத்தியம்) அவர்கள் மீது சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையினரால் தெரிவிக்கப்படும் தணிக்கைத் தடைகள்/நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றுக்கு இத்தனியரை முழு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி தனியரை 31.10.2015 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/21254/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.606/2015 **பொருள் எண்.16**

வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி

டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், அவர்கள் உதவி சுகாதார அலுவலராக 16.06.1989 அன்று முதல் சென்னை மாநகராட்சி, சுகாதாரத் துறையில் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் 16.06.1989 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டு, 16.06.1991 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டது. (செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/319/1989, நாள்: 24.12.1992), இதனை தொடர்ந்து மன்றத்தீர்மான எண்.242/2007, நாள்: 28.05.2007ல் சென்னை மாநகராட்சியில் கூடுதலாக ஒரு கூடுதல் சுகாதார அலுவலர் பதவி தோற்றுவிக்கப்பட்டு பின்னர் 10.08.2007 பிற்பகல் முதல் இவர் கூடுதல் மாநகர சுகாதார அலுவலராக பணியமர்த்தப்பட்டார். இவருக்கு கூடுதல் மாநகர சுகாதார அலுவலராக 10.08.2007 பிற்பகல் முதல் கருத்தியலாக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கு அரசு பின்னேற்பு வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை (ப) எண்.413, ந.நி.ம.கு.வ. (மா.ந.3) துறை, நாள்: 24.10.2011) . இவருடைய பிறந்த தேதி 06.04.1955 வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.04.2013.

தனியர் 30.04.2013 அன்று வயது முதிர்வு ஓய்வு நாளை அடைந்ததால் தனியரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிப்பது தொடர்பாக இவர் பணிபுரிந்த துறை / மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை / முன்பணம் நேர் செய்யப்படாதது / ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையென்ற சான்றுகள் பெறப்பட்டது. தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையெனவும், சில கோப்புகளின் நிலை குறித்து இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி பொதுத்துறையிடமிருந்து தெரிந்து கொள்ளுமாறும் 16.04.2013 நாளிட்ட குறிப்பில் விழிப்பு அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. தனியர் மீதான நடவடிக்கைகள் கைவிடப்பட்டு அரசாணை (ப) எண்.175, ந.நி.ம.கு.வ. (எம்.இ.4) துறை, நாள்: 03.04.2013ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அவர்களின் 19.04.2013 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சி பொதுத்துறையில் தனியர் மீது எந்தவொரு ஒழுங்கு நடவடிக்கை கோப்பும் நிலுவையில் இல்லையென உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 18.04.2013 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் ஏதும் நிலுவையில்லை என்ற சான்று பெறப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, 30.04.2013 பிற்பகல் முதல் தனியரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க மன்றத்தீர்மான எண்.275/2013, நாள்: 26.04.2013ல் அனுமதி பெறப்பட்டது. எனினும் சென்னை மாநகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள நிலையில் பொது சுகாதார பணிகள் தொடர்ந்து நடைபெறவும் மற்றும் ''அம்மா உணவகம்'' கூடுதலாக திறக்க இருந்ததாலும் நிர்வாக நலன் கருதி 01.05.2013 முதல் 30.04.2014 வரை ஓர் ஆண்டிற்கு தனியருக்கு பணி நீட்டிப்பு செய்து அரசாணை (2ப) எண்.30, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்: 30.04.2013ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், தனியர் 01.05.2013 முதல் 30.04.2014 வரை பணி நீட்டிப்பு காலத்தில் தொடர்ந்து கூடுதல் மாநகர சுகாதார அலுவலராக பணிபுரிந்து வந்தார். (பணிப்பதிவேடு பக்க எண்.11, தொகுதி–2)

மேற்படி, தனியரை பணிநீட்டிப்பு செய்து அரசாணை பிறப்பிக்கப்பட்டதால், ஏற்கனவே, தனியரை 30.04.2013 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி பெறப்பட்ட மன்றத்தீர்மான எண்.275/2013, நாள்: 26.04.2013ன் மீது தொடர் நடவடிக்கை எடுப்பதை கைவிடுவதற்கு மன்றத்தீர்மான எண்.390/2013, நாள்: 26.06.2013ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தனியருக்கு வழங்கப்பட்ட பணி நீட்டிப்பு 30.04.2014 அன்று முடிவடைந்ததால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிப்பது தொடர்பாக விழிப்பு அலுவலரிடம் அறிக்கை கோரியதில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையெனவும், இருப்பினும் காசிமேடு மயானபூமியில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கையை முதன்மைச் செயலர்/ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக 09.04.2014 நாளிட்ட விழிப்பு அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விழிப்பு அலுவலர் அவர்களின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காசிமேடு மயானபூமி தொடர்பான விசாரணை கோப்பை சுகாதார துறையிலிருந்து பெற்று பரிசீலனை செய்ததில், காசிமேடு மயானபூமியில் கல்லறைகள் கட்டியதில் டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், அவர்கள் முறைகேடு புரிந்துள்ளதாக விழிப்பு அலுவலரால் 27.03.2014 அன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்பில், குறிப்பு கோப்பு எண்.வி.து.ந.க.எண்.சி2/135 / 2014 பக்கம் எண்.15ல் இனம் **"அ" (6)ல்** "**கல்லறை /சமாதி சட்டுவதற்கு அனுமதிக்கும் கோப்பில், சம்மந்தப்பட்ட கோட்டத்தின் சுகாதார ஆய்வாளர், மண்டல சுகாதார அலுவலர் ஆகியோரின் கருத்துரை இல்லாமலேயே திரு தங்கராஜ் கூடுதல் மாநகர நல அலுவலர் அவர்கள் 64 எண்ணிக்கையிலான கோப்பிலும், திரு குகாநந்தம், மாநகர நல அலுவலர் அவர்கள் 04 எண்ணிக்கையிலான கோப்பிலும் ஆணையிட்டுள்ளதால் மேற்கண்ட இருவர் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது** " என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த குறிப்பின் மீது முதன்மை செயலர்/ஆணையர் அவர்களால், **"பேசுக"** என குறிப்பெழுதப்பட்டுள்ள விவரமும் அறிய வந்துள்ளது. இக்கோப்பினை ஆய்வு செய்ததில், முதன்மை செயலர் / ஆணையர் அவர்களால் **"பேசுக"** என தெரிவிக்கப்பட்ட பின்னர் இக்கோப்பு சம்மந்தப்பட்ட எவராலும் பேசப்படவில்லை என அறியப்படுகிறது. இக்கோப்பில், மேலும் எவராலும் தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அறியப்படுகிறது. இக்கோப்பு பொதுத்துறையில் 09.10.2015 அன்று சுகாதாரத்துறையின் வாயிலாக பெறப்பட்டுள்ளது. (விழிப்பு அலுவலரால் அனுப்பப்பட்டுள்ள இந்த சம்மந்தப்பட்ட கோப்பு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.)

தனியர் 30.04.2014 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுவதை முன்னிட்டு தனியரின் பணிப்பதிவேடு முன்தணிக்கைக்காக உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடமிருந்து 18.03.2014 நாளிட்ட முன் தணிக்கை சான்று பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது சுகாதாரத்துறையில் தலைமையிடத்தில் பணிபுரிந்த காலத்தில் 2010–2011 வரை தணிக்கை தடை மற்றும் முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லையெனவும், மேலும் 2011–2012, 2012–2013, 2013–2014, 2014–2015 ஆண்டுக்ளுக்கான தணிக்கை நடைபெறவில்லையெனவும், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை மற்றும் முன்பண நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவற்றிற்கு தனியரை பொறுப்பாக்கி தனியரின் ஓய்வூதிய பயன்களில் பிடித்தம் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களால் 15.04.2014 நாளிட்ட சான்று வழங்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 22.04.2014 நாளிட்ட குறிப்புரையில் அன்னார் உதவி நல அலுவலராக பணியாற்றிய சுகாதாரத்துறை மற்றும் மண்டலங்களின் தணிக்கை அறிக்கை, தணிக்கை குறிப்பு குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித் தணிக்கை அறிக்கைகளின்படி, மொத்தம் ரூ.7,45,710/– உள்ளடக்கிய 5 தணிக்கைத் தடைகள் அன்னாரின் தனிப்பொறுப்பில் உள்ளதாகவும், ரூ.62,69,609/– உள்ளடக்கிய 10 தணிக்கைத் தடைகள் கூட்டுப் பொறுப்பில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், மேலும் சுகாதாரத்துறையின் 2003–2004ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின்படி டாக்டர்.கிருஷ்ணா மற்றும் டாக்டர். ஜி.டி.தங்கராஜன் ஆகியோர் சுகாதார அலுவலர்களாக பதவி வகித்த காலத்தில், மொத்தம் ரூ.1,87,80,215/– உள்ளடக்கிய 14 தணிக்கைத் தடைகள் பொதுவான தன்மையுடைய குறைபாடுகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் 2011–12, 2012–13 மற்றும் 2013–14 ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் இதுவரை வெளியிடப்படவில்லை எனவும், டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் அவர்கள் மீது மேலே கூறப்பட்ட தணிக்கைத் தடைகள் உட்பட, மேலும் தணிக்கைத் தடைகள், நேர் செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏதேனும் பின்னர் தெரியவரும் நிலையில் அல்லது இதன் மீதான தணிக்கைத் தடைகளை நீக்க தவறும் நிலையில் அவற்றிற்கு தனியரை முழுப்பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு 1 Bன் கீழ் வருவதால் தனியரை பணியிலிருந்து விடுவிக்கும் அதிகாரம் சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கை தடைகள் மற்றும் அலுவலக முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு எதேனும் ஏற்பட்டது என பின்னர் தெரியவரின் அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்படுத்தியும், மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியரை 30.04.2014 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்து 28.04.2014 நளிட்ட செயல்முறை ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி, நிதி ஆலோசகர் அவர்களின் 22.04.2014 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தணிக்கை தடைகள் அனைத்தும் நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டதற்கான கடிதங்களின் நகல்கள் 20.05.2015 நாளிட்ட சுகாதாரத்துறையின் குறிப்பின் மூலமாகவும் மற்றும் 14.07.2015 நாளிட்ட கடிதத்தின் மூலமாகவும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்காக பொதுத்துறைக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி, சுகாதாரத்துறையில் வரப்பெற்றுள்ள தணிக்கை தடை நீக்க கடிதங்களை ஆய்வு செய்ததில், டாக்டர்.ஜி.ட்டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் அவர்கள் மீது இருந்த தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்ட விவரமும் மற்றும் தணிக்கை தடை பொறுப்பிலிருந்து தனியரை விடுவிக்கப்பட்ட விவரமும் அறியவந்துள்ளது.

காசிமேடு மயான பூமியில் கல்லறைகள் கட்டியதில் முறைகேடு தொடர்பான கோப்பில் டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், அவர்களை உட்படுத்தி, விழிப்பு அலுவலரால் 27.03.2014 அன்று சமர்ப்பிக்கப்பட்ட கோப்பின் மீது எதிர்பாராத விதமாக துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களால் கலந்தாய்வு மேற்கொள்ளாத நிலை இருப்பினும், இக்கோப்பில் பிறப்பிக்கப்படும் இறுதி உத்தரவில், தனியர் மீது எதிர்மறை குறிப்புகள் ஏற்படும் பட்சத்தில், ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வு பெற்ற நாள் முதல் 4 ஆண்டு காலத்திற்குள் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வழிவகை உள்ளதாலும், மேற்படி விசாரணை கோப்பில் தனியரால் அரசுக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்பதாலும், எற்கனவே இந்த விசாரணை கோப்பில் இடம்பெற்றிருந்த டாக்டர். ப்பி. குகானந்தம் மாநகர சுகாதார அலுவலர் அவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும், டாக்டர். ஜி.டி.தங்கராஜன் கூடுதல் மாநகர சுகாதார அலுவலர் அவர்களை 30.04.2014 முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, மேற்கண்ட விவரங்களின்படி டாக்டர்.ஜி.டி.தங்கராஜன், கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், **மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு 30.04.2014** அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வளித்து பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிகழ்வுக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண். ஈ1/ 36403 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின்16.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.607/2015 **பொருள் எண்.17**

சென்னை மாநகராட்சியில் உள்ள செயற்பொறியாளர் கூடுதலான பணியிடங்கள் ஒப்பளிக்க அரசிற்கு கருத்துரு அனுப்ப அனுமதி

04.07.2015 நாளிட்ட மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பில், 9வது மண்டலத்தில் உள்ள 18 வார்டுகளை மேற்பார்வையிடுவதற்கு இரண்டு செயற் பொறியாளர்கள் மட்டுமே பணியமர்த்தப்பட்டுள்ளனர் எனவும், இது பணிச்சுமையினை அதிகமாக்குகிறது எனவும், ஆகையினால், Core City-ல்,பணிக்கு தகுந்தாற்போல் கூடுதலாக செயற் பொறியாளர்கள் பணியிலமர்த்தப்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்குமாறும், மேலும் ஒரு மண்டலத்தில் ஒவ்வொரு உதவி செயற்பொறியாளருக்கும் அதிகபட்சமாக 3 வார்டுகள் மற்றும் ஒவ்வொரு செயற்பொறியாளருக்கும் அதிகபட்சமாக 5 வார்டுகள் மட்டுமே நிர்வகிக்கும் வண்ணம் மாற்றி அமைத்து, மண்டல அளவில் உதவி செயற் பொறியாளர்கள் மற்றும் செயற்பொறியாளர்களின் எண்ணிக்கையை கூட்ட வேண்டும் என்று அறிவுருத்தியிருந்தார்.

27.08.2015 நாளிட்ட உதவி ஆணையர் (பொ.நி.ம.ப.) அவர்களின் குறிப்பில், மேற்கண்ட பொருள் குறித்து தலைமைபொறியாளர்(பொது) அவர்களிடம் கருத்து கோரப்பட்டது.

27.08.2015 நாளிட்ட தலைமை பொறியாளர்(பொது) அவர்களின் குறிப்பில், **Core city** ல் செயல்படும் மண்டலங்கள் 4,5,6,8,9,10 மற்றும் 13 ஆகிய ஏழு மண்டலங்களுக்கு தலா ஒரு செயற்பொறியாளர் கூடுதலாக பணியமர்த்தலாம் எனவும், மேலும், பேருந்து சாலைகள் துறைக்கு சாலைப் பணிகள் தவிர போக்குவரத்து சிறப்பு அபிவிருத்தி பணிகளுக்காக கூடுதலாக ஒரு செயற்பொறியாளர் பணியிடம் அளிக்கலாம் எனவும் மழைநீர் வடிகால் துறையில் ரூ.4000 கோடி அளவில் பணிகள் நடைபெறுவதால் தற்போதுள்ள பணியிடங்களுடன் கூடுதலாக 2 செயற்பொறியாளர் பணியிடங்கள் அளிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும், தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் குறிப்பில், தற்போது இயந்திரப்பொறியியல் துறைக்கும், திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கும் சேர்த்து ஒரு செயற்பொறியாளர் பணியிடம் மட்டுமே உள்ளது. இதனை மாற்றியமைத்து இயந்திரப்பொறியியல் துறைக்கு 2 செயற்பொறியாளர் பணியிடங்களும், திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு ஒரு செயற்பொறியாளர் பணியிடமும் அளிக்கலாம் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

31.08.2015 நாளிட்ட துணை ஆணையர்(பணிகள்) அவர்களின் குறிப்பின்படி, 03.09.2015 நாளிட்ட உதவி ஆணையர் அவர்களின் குறிப்பில், கூடுதல் செயற்பொறியாளர் பதவியை உருவாக்க கருத்துருவை விரிவான அறிக்கையாக சமர்ப்பிக்குமாறு தலைமை பொறியாளர் (பொது) அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

10.09.2015 நாளிட்ட தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் குறிப்பில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட சென்னை மாநகரம் 10 மண்டலங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. தற்போது சென்னை மாநகராம் எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுடன் 15 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் பணி செய்யும் பொறியாளர்களின் பணிச்சுமை மும்மடங்கு அதிகரித்துள்ளது எனவும்,

இதனை கருத்தில் கொண்டு மாண்புமிகு மேயர் அவர்கள் 04.07.2015 அன்று ஆணையர் கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில், Core Cityயில் கூடுதலாக செயற் பொறியாளர்கள் பணியமர்த்தப்பட தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆணையர் அவர்களை கேட்டுக் கொண்டார் எனவும்,

இதன்படி 25.08.2015 அன்று துணை ஆணையர் (பணிகள்) தலைமையில் அனைத்து துறைத் தலைவர்களும் கலந்து கொண்ட Re organisation Committee கூட்டம் நடத்தப்பட்டது. அதில் Core Cityயில் (7 மண்டலங்களில்) கூடுதலாக ஒரு செயற்பொறியாளர் வீதம் 7 செயற்பொறியாளர் பதவியை உருவாக்க போதுமான வழிவகைகள் ஆய்வு செய்து சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது எனவும்,

தற்போது Core Cityயில் உள்ள மண்டலங்களில் இரண்டு செயற் பொறியாளர்களைக் கொண்டு பணியை செம்மையாகவும் மற்றும் துரிதமாகவும் செய்ய கடினமாக உள்ளது எனவும், கீழ்க்கண்ட முக்கிய பணிகள் மண்டலத்தில் உள்ள செயற்பொறியாளர்களால் அன்றாடம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனவும்,

JOB CHART FOR EXECUTIVE ENGINEER WORKING IN ZONES

1. Assist the Zonal Officer in all matters concerning Engineering.
2. Monitor the quality and progress of Road and Road cut Restoration works.
3. Obtain administrative as well as technical sanction for various estimates.
4. Call for and settlement of Tenders for various estimates.
5. Monitor the performance of patch work. Cleaning of water table, and desiliting of Storm Water Drains.
6. Monitor the maintenance of Roads, footpaths, culverts, Storm Water drains, public conveniences, school buildings, parks, playgrounds and other buildings of Corporation.
7. Protect all Corporation properties in his area including buildings, lands, roads, trees and other structures.
8. Monitor detection, issue of notice and launching of prosecutions against unathorised construction/deviations.
9. Watch the performance of Divisional A.E/J.E and Unit A.E.Es
10. Supervise attendance checking and monitor the march out of vehicles and ensure prompt repair of vehicles.
11. Supervise marching out of unit lorries.
12. Allocate works for unit Lorries and ensure proper development.
13. Supervise Conservancy work and maintenance of route charts.
14. Monitor the procurement of material such as brooms, baskets, etc., for Conservancy work.
15. Watch the performance of material Staff of the Zonal Office.
16. Attend to drawl and disbursement of pay for all the staff.
17. Maintenance of leave account and service Register of the staff.
18. Ensure prompt settlement of retirement and other terminal benefits of the staff.
19. Assist the Zonal Officer in all other matter including provision of food, shelters and water supply etc., to the affected people at time of Natural Calamities like fire, flood etc.
20. Assist the Zonal Officer in election work and
21. Also to attend day to day public grievences.

2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி, மண்டலம் **4,5,6,8,9,10** மற்றும் **13** ஆகிய 7 மண்டலங்களின் மக்கள் தொகை, வார்டுகளின் எண்ணிக்கை மற்றும் அந்த மண்டலங்களின் பரப்பளவு கீழ்கண்டவாறு உள்ளது ,

Zone	Total No. of Population (as per 2011 Tentative list)	No. of wards	Area Sq.Km.
IV	903397	15	20.85
V	619437	15	21.82
VI	647578	15	17.11
VIII	664722	15	25.29
IX	746198	18	25.19
X	805441	18	22.42
XIII	525421	13	40.36
7 Zones	49,12,194	109	173.04

எனவே, மேற்கண்ட மண்டலங்களில் மக்கள் தொகை மேலும் அதிகரித்துள்ளது. இச்சூழ்நிலையில் மக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் அதிகாரிகள் இருக்க வேண்டும் எனவும்,

மேற்கூறிய மண்டலங்கள் ஆர்.கே.நகர், ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையார் பகுதிகள் சார்ந்தவை. இப்பகுதிகளில் முக்கிய நபர்கள் (VIP) உள்ளதால், பணியை செம்மையாகவும், துரிதமாகவும் முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளது எனவும்,

மேலும் மக்களும் தங்களுடைய பிரச்சினைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய எதிர்பார்க்கின்றனர் எனவும்,

இச்சூழ்நிலையில் சென்னை மாநகராட்சியில் Core City எனப்படுகின்ற 7 மண்டலங்களில் கூடுதலாக 7 செயற்பொறியாளர் பதவியை உருவாக்கிட அவசியமாகிறது. கூடுதலாக பணியமர்த்தப்படும் செயற்பொறியாளர்களின் ஊதியப் பட்டியல் பின்வருமாறு அமையும் எனவும்

வ. எண்	கூடுதலாக தேவைப்படும் பதவியின் பெயர்	சம்பள விவரம் ரூ. 15600–39,100+7600		தொகை
1)	செயற்பொறியாளர்கள்–7	Pay	23200	ரூ.53,316/–
		DA	26216	
		HRA	3200	
		CCA	800	
		MA	100	
	ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு ரூ.53,316 x 7 =			ரூ.3,73,213/–
	ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு ரூ.3,73,213/– x 12=			ரூ.44,78,544/–

மேலும், தற்போது சென்னை மாநகராட்சியின் மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் மற்றும் மத்திய உருளை நிலையம் கூடுதல் செலவினம் காரணமாக பணியை முழுவதுமாக நிறுத்தம் செய்ய மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது (மன்ற தீர்மானம் எண்.251/2015, தேதி. 06.07.2015). தற்போது பணிபுரியும் பணியாளர்களை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும்,

இதன்படி மத்திய உருளை நிலையத்தில் 7 விதமான 23 எண்ணிக்கையிலான காலியான பணியிடங்களும் மற்றும் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்தில் 2 விதமான 3 எண்ணிக்கையிலான காலியான பணியிடங்களும் இனிவரும் காலங்களில் இப்பதவிகளுக்கு புதிய நியமனங்கள் ஏதும் செய்யாமல் இருக்கவும் மற்றும் இப்பதவிகளை அரசுக்கு ஒப்படைப்பு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும்,

இப்பதவிகளை ஒப்படைப்பு செய்து அதற்கு ஈடாக Core City-ல் 7 செயற்பொறியாளர் பதவிகளை உருவாக்கலாம் எனவும்,

தற்போது மத்திய உருளை நிலையத்தில் மற்றும் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்திலும் காலியாக உள்ள பதவிகளின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	காலியாக உள்ள பதவியின் பெயர் மற்றும் எண்ணிக்கை	சம்பள விவரம்	தொகை
1)	டீசல் மெக்கானிக்–3 (CRS)	ரூ. 5200–20,200+1800	ரூ.15,770 x 3= ரூ.47,310/–
2)	டீசல் மெக்கானிக் உதவியாளர்–3 (CRS)	ரூ. 5200–20,200+1300	ரூ.14,705 x 3= ரூ.44,115/–
3)	பிளான்ட் ஆபரேட்டர் உதவியாளர்–4 (CRS)	ரூ. 5200–20,200+1300	ரூ.14,705 x 4= ரூ.58,820/–
4)	ரோலர் ஓட்டுநர்–8 (CRS)	ரூ. 5200–20,200+1900	ரூ.15,983 x 8=ரூ.1,27,864/–
5)	வாட்ச்மேன்–2 (CRS)	ரூ. 5200–20,200+1300	ரூ.14,705 x 2= ரூ.29,410/–
6)	இரவு காவலர்–2 (CRS)	ரூ. 5200–20,200+1300	ரூ.14,705 x 2= ரூ.29,410/–
7)	அலுவலக உதவியாளர்–1 (CRS)	ரூ. 4800–10,000+1300	ரூ.13,853/–
8)	வர்க்ஸ் ஃபோர்மென்–1 (CAP)	ரூ.5200–20200+1800	ரூ.15,770/–
9)	தலைமை ஓட்டுநர் –2 (CAP)	ரூ.5200–20200+2400	ரூ.17,048x 2= ரூ.34,096/–
	ஒரு மாதத்திற்கு ஆகும் செலவு		ரூ.4,00,648/–
	ஒரு வருடத்திற்கு ஆகும் செலவு		ரூ.48,07,776/–

இவ்வாறு, சென்னை மாநகராட்சியின் மத்திய உருளை நிலையத்தில் இருந்து 7 விதமான 23 எண்ணிக்கையிலான காலியான பணியிடங்களும் மற்றும் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்திலிருந்து 2 விதமான 3 எண்ணிக்கையிலான காலியான பணியிடங்களும் கொண்ட மூன்றாம் வகுப்பு மற்றும் நான்காம் வகுப்பு நிலை பணியாளர்களின் பதவிகளை புதிய நியமனங்கள் ஏதும் செய்யாமலிருக்கவும் மற்றும் இப்பதவிகளை அரசுக்கு ஒப்படைப்பு செய்து விட்டு, Core City யில் 7 கூடுதல் செயற்பொறியாளர் பதவியை உருவாக்க அரசுக்கு முன்மொழிவு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் **Justification** குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, கூடுதலாக உருவாக்கப்படும் 7 செயற்பொறியாளர்களுக்கான பணியிடங்களுக்கு ஏற்படும் செலவினத்தை அரசுக்கு ஒப்படைப்பு செய்யும் மத்திய உருளை நிலையம் மற்றும் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்திற்கான செலவினத்தில் ஈடு செய்து கொள்ளலாம் என்றும்,

வ. எண்.	விவரம்	அரசுக்கு ஒப்படைப்பு செய்யும் CAP& CARS நிலையத்தின் செலவினம் ரூ.	கூடுதலாக உருவாக்கப்படும் 7 செயற்பொறியாளர் களுக்கான செலவினம் ரூ.
1.	மாத செலவினம்	4,00,648.00	3,73,213.00
2.	ஆண்டு செலவினம்	48,07,776.00	44,78,544.00

கூடுதலாக உருவாக்கப்படும் செயற்பொறியாளர்களுக்கான பணியிடங்களுக்கு மேற்கொண்டு சென்னை மாநகராட்சிக்கு கூடுதலாக நிதிச்சுமை ஏற்பட வாய்ப்பில்லை.

எனவே, கூடுதலாக உருவாக்கப்படும் ஏழு செயற்பொறியாளர்கள் பணியிடங்கள் மூலம் Core Cityயில் பணிகள் துரிதமாகவும், செம்மையாகவும் செயல்படுவற்கு கூடுதல் செயற்பொறியாளர் பணியிடங்கள் ஒப்பளிப்பு (Additional compliment) செய்ய வேண்டி அரசுக்கு கருத்துரு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியனமக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.ஈ2/20082/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 23.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.608/2015 பொருள் எண்.18

2015–16ம் ஆண்டிற்கான உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு 15.05.2015ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டது – தற்போது திருத்திய தெரிவுப்பட்டியல் தயாரிப்பது – அனுமதி

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலர் பதவியில் காலியாக இருந்த 15 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 15.05.2015ஐ மைய நாளாக கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டதில், திரு.வி.மோகன்ராம்சிங், வரி மதிப்பீட்டாளர் என்பவர் மட்டும் முழு தகுதிகள் பெற்றிருந்ததால் இவரது பெயரை மட்டும் தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்பட்டு மன்றத்தீர்மான எண்.440/2015 நாள்: 03.08.2015ல் ஒப்புதல் பெறப்பட்டு,11/8/2015 நாளிட்ட ஆணையர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணையின் மூலமாக தனியருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இதுதவிர, உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊட்டப்பதவியான வரி மதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டு காலம் பணிபுரிந்திருக்க வேண்டுமென்ற தகுதியை தவிர பிற அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ள வரி மதிப்பீட்டாளர்களுக்கு பணிகாலத்தகுதி மட்டும் தளர்வு செய்து பதவி உயர்வு வழங்க அரசின் ஆணை பெறுவதற்கு மன்றத்தீர்மான எண்.440/2015 நாள்: 03.08.2015ல் அனுமதி பெறப்பட்டு அரசுக்கு 11.08.2015 நாளிட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டது.

1) திரு. எஸ். ஜெகநாதன் (பணிக்கால தகுதி மட்டும் நிறைவு செய்யாதவர்)
2) திரு.ஜெ. டைடஸ் அந்தோணி (பணிக்கால தகுதி மட்டும் நிறைவு செய்யாதவர்)

அரசாணை (ப) எண்.611 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை நாள்: 12.10.2015ல் உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்விற்கு வரையறுக்கபட்டுள்ள ஊட்டப் பதவியான வரி மதிப்பீட்டாளர் பதவியில் 5 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும் என்ற விதியை, திருவாளர்கள் எஸ்.ஜெகநாதன் மற்றும் ஜெ.டைடஸ் அந்தோணி ஆகியோர் பொருட்டு தளர்வு செய்து, பின்வரும் 3 பெயர்களைக் கொண்ட 2015–2016 உதவி வருவாய் அலுவலர் தேர்ந்த பெயர் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அவர்களை உதவி வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு செய்தும், மேலும் இவர்களை தற்போது காலியாகவுள்ள பணியிடத்தில் முதுநிலைப்படி பணியமர்த்தப்பட வேண்டும் எனவும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1) வி.மோகன்ராம்சிங்
2) எஸ்.ஜெகநாதன்
3) ஜெ.டைடஸ் அந்தோணி

அ) 2015–2016ஆம் ஆண்டிற்கான உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு கீழ்கண்ட நபர்களை கொண்ட திருத்திய தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

1) திரு. வி. மோகன்ராம்சிங்
2) திரு. எஸ். ஜெகநாதன்
3) திரு. ஜெ. டைடஸ் அந்தோணி

ஆ) மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் கண்டுள்ள வரி மதிப்பீட்டாளருக்கு 2015–16ஆம் ஆண்டின் தெரிவுப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ள நிலையில் அரசாணை (ப) எண்.611, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்: 12.10.2015ல் ஆணையிட்டுள்ளவாறு தற்போது தயாரிக்கப்பட்டுள்ள மேற்கண்ட திருத்திய தெரிவுப்பட்டியலில் வரிசை எண்2 மற்றும் 3ல் கண்டுள்ள வரி மதிப்பீட்டாளர்களுக்கு ரூ.15600–39100+ தரஊதியம் ரூ.5400 என்ற ஊதிய விகிதத்தில் உதவி வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு வழங்கவும்,நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண்.இ7/37345/2009

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.609/2015 **பொருள் எண்.19**

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள்–2009 –அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப அனுமதி

சென்னை மாநகராட்சி மன்றத் தீர்மானம் எண்.369/98, நாள்:29.04.1998ல் பெறப்பட்ட தீர்மானத்தின்படி, சென்னை மாநகராட்சி சுகாதாரம், மலேரியா மற்றும் குடும்ப நலம், ஆகிய துறைகளுக்கான வகுப்பு–3 மற்றும் வகுப்பு–4ம் நிலை சார்நிலைப் பணிகளுக்குரிய துணை விதிகள் 2010ம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் தற்போதைய நிர்வாக அமைப்பிற்கு ஏதுவாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு மன்றத் தீர்மானம் எண்.46/2010, நாள்:28.01.2010ல், சென்னை மாநகராட்சி சுகாதாரம், மலேரியா மற்றும் குடும்ப நலத்துறை , வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் சார்நிலைப் பணிகளுக்கான வரைவு துணை விதிகள் – 2009க்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு அரசின் ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டது.

அரசு தன்னுடைய 02.08.2011 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாநகராட்சி சுகாதாரம், மலேரியா மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை, வகுப்பு–3 மற்றும் 4ம் நிலை சார்நிலைப் பணியாளர்கள் துணை விதிகளில் சுகாதார ஆய்வாளர் நிலை–2 பதவி மற்றும் வேறு ஏதேனும் பதவிகள் இந்த வரைவு துணை விதிகளில் சேர்க்கப்படாமல் விடுபட்டிருந்தால் அவைகளையும் சேர்த்து, திருத்தங்கள் மேற்கொண்டு, இறுதி வரைவு துணை விதிகளை நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு திருத்திய செயற்குறிப்பு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது சென்னை மாநகராட்சியுடன் சில நகராட்சிகள், பேரூராட்சிகள், மற்றும் ஊராட்சிகள் இணைக்கப்பட்டு 3 வட்டார அலுவலகங்களாகவும், 15 மண்டலங்களாகவும், 200 வார்டுகளாகவும், விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை மாநகராட்சி பணிகள் விரிவடைந்ததின் காரணமாக கூடுதலாக சில பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டும் அரசாணைகள் பெறப்பட்டுள்ளது.

இந்நிலையில், நிர்வாக நலன் கருதி, சென்னை மாநகராட்சி சுகாதாரம், மலேரியா மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு 3 மற்றும் 4ஆம் நிலை சார்நிலைப் பணிகளுக்கான வரைவு துணை விதிகள்–2009ல் மனறத் தீர்மானம் எண்.727/2013, நாள்:31.10.2013ல் மாவட்ட குடும்ப நல துறையைச் சார்ந்த தாய்சேய் நல அலுவலர் பதவி, நகர சுகாதார செவிலியர் பதவிகளில் சில திருத்தங்கள் மேற்கொண்டும் விடுபட்டுள்ள பதவியான தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியினை துணை விதிகளில் சேர்த்தும் அனுமதி பெறப்பட்டுள்ளது மற்றும் மன்றத் தீர்மானம் எண்.555/2014, நாள்:25.10.2014ல் சுகாதாரத் துறை சார்ந்த ஆண் இரண சிகிச்சையாளர்/பெண் இரண சிகிச்சையாளர் பதவிக்கும் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும, அரசு கடிதத்தின்படி விடுபட்டுள்ள பதவிகளும் தற்போது துணை விதிகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கொண்ட விபரங்களின் அடிப்படையில், மன்றத் தீர்மானம் எண்.46/2010, நாள்:28.01.2010ல் சென்னை மாநகராட்சி சுகாதாரம், மலேரியா மற்றும் குடும்ப நலத்துறை, வகுப்பு 3 மற்றும் வகுப்பு 4ம் நிலைப் பணியாளர்கள் சார்நிலைப் பணிகளுக்கான வரைவு துணை விதிகள்–2009 என்று குறிப்பிட்டுள்ளதில், மலேரியா மற்றும் வரைவு என்பதை தவிர்த்து, சென்னை மாநகராட்சி சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, வகுப்பு–3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள்–2009 (CHENNAI CORPORATION HEALTH AND FAMILY WELFARE SUBORDINATE SERVICES REVISED BYE-LAWS-2009) எனத் திருத்தம் செய்து, இத்துணை விதிகளில், நிர்வாக நலன் கருதி, விடுபட்டுள்ள பதவிகள் சேர்த்தும், சில பதவிகள் நீக்கம் செய்தும், சில பதவிகளுக்கு நிர்வாக நலனுக்கு ஏற்றவாறு பெயர் திருத்தம், நியமன முறை மற்றும் கல்வித் தகுதிகளில் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறை மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை சார்நிலைப் பணிகளின் கீழ் வரும் பதவிகளுக்கு தயாரிக்கப்பட்டுள்ள, சென்னை மாநகராட்சி சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, வகுப்பு–3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்கள் சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள்–2009க்கு (CHENNAI CORPORATION HEALTH AND FAMILY WELFARE SUBORDINATE SERVICES REVISED BYE-LAWS-2009) அரசின் ஒப்புதல் பெற அரசுக்கு அனுப்ப நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி, சுகாதரம் மற்றும் குடும்ப நலத்துறை
சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட சட்ட விதிகள் – 2009

1. சிறு தலைப்பும் தொடக்கமும்:–

இவ்வரைவு துணை விதிகள், சென்னை மாநகராட்சி நலத் துறை மற்றும் குடும்ப நலத்துறை சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட சட்ட விதிகள் 2009 என்று அழைக்கப்படும்.

2. அமைப்பு:– இப்பணி சென்னை மாநகராட்சியின் வகுப்பு–3 மற்றும் 4ல் உள்ள கீழ்க்கண்ட 28 வகைப் பதவிகளாகக் கொண்டிருக்கும்.

வகுப்பு–3

வகை–1 – இளநிலை பகுப்பாய்வாளர்
வகை–2 – புள்ளியியல் மேற்பார்வையாளர்
வகை–3 – ஆய்வுக் கூடத் தொழில்நுட்பனர்
வகை–4 – இளநிலை பூச்சியிலர்
வகை–5 – கள உதவியாளர்
வகை–6 – ஆய்வு உதவியாளர்/நுண்ணுயிரியலாளர்
வகை–7 – உதவி உயிர் வேதியியலாளர்
வகை–8 – உயிர் வேதியியலாளர்
வகை–9 – சுகாதார ஆய்வாளர்
வகை–10 – துப்புரவு அலுவலர்
வகை–11 – மருந்தாளுநர்
வகை–12 – தலைமை மருந்தாளுநர்
வகை–13 – மருத்துவப் பண்டக அலுவலர்
வகை–14 – நகர சுகாதார செவிலியர்
வகை–15 – பகுதி சுகாதார செவிலியர்
வகை–16 – பணிச் செவிலியர்
வகை–17 – தாய் சேய் நல அலுவலர் (MCHO)
வகை–18 – உதவி செவிலி கண்காணிப்பாளர்/பொதுநல செவிலி பயிற்சியாளர்
வகை–19 – செவிலி கண்காணிப்பாளர்
வகை–20 – திட்ட உணவியலாளர்
வகை–21 – புள்ளியியல் உதவியாளர்
வகை–22 – இ.சி.ஜி. தொழில்நுட்பனர்
வகை–23 – அடிப்படை சுகாதார பணியாளர்
வகை–24 – சுகாதார ஆய்வாளர் நிலை–II
வகை–25 – தொகுப்பாளர் மற்றும் எழுத்தர்

வகுப்பு–4

வகை–26 – இளநிலை சமையலர்
வகை–27 – மயான உதவியாளர்
வகை–28 – ஆண் இரண சிகிச்சையாளர் /பெண் இரண சிகிச்சையாளர்

3. நியமனம்:– கலம்–3ல் உள்ள தொடர்பான பதிவுகளில் குறிப்பிட்டுள்ள பணி நியமனத்திற்கான முறைகளின்படி கலம்–2ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கான நியமனம் செய்யப்படும்.

4. சென்னை மாநகராட்சி திருத்தப்பட்ட சார்நிலைப் பணியாளர்களுக்கான துணைவிதிகள் பகுதி–1ல் பரிந்துரைக்கப்பட்டுள்ள விதிகள், சுகாதாரம், மலேரியா மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை ஆகிய துறைகளுக்கும் பொருந்தும்.

5. **வகுப்பு–3**

வ. எண்.	பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச தகுதி	குறிப்பு
01.	இளநிலை பகுப்பாய்வாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்றதொரு முதுகலை அறிவியல் பட்டம் (வேதியியல்) அல்லது (உயிர் வேதியியல்) அல்லது (பால்பண்ணை வேதியியல்) அல்லது (உணவுத் தொழில்நுட்பம்) அல்லது (நுண்ணியிரியல்) அல்லது (உணவு மற்றும் மருந்துகள் தொழில்நுட்பம்)	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4600 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள்

		2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம் 3. நேரடி நியமனம்		
02.	புள்ளியியல் மேற்பார்வையாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம் 3. நேரடி நியமனம்	1. முதுநிலை அறிவியல் பட்டம் (புள்ளியியல்) 2. பயோ–இன்பர்மேடிக்ஸ் படிப்பில் பட்டயம் (Diploma in Bio Informatics)	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4400 நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜனவரி முதல் நாள்
03.	ஆய்வுக் கூடத் தொழில் நுட்பனர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	1) 12ம் வகுப்பு தேர்ச்சி 2) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட 2 வருட மருத்துவ ஆய்வகத் தொழில் நுட்பனர் படிப்பில் பட்டயம்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4200 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள்
04.	இளநிலை பூச்சியிலர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2.நேரடி நியமனம்	அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகத்தில் இருந்து பெற்ற முதுகலை அறிவியல் பட்டம் (விலங்கியல்) அல்லது முதுகலை அறிவியல் (மருத்துவ பூச்சியியல்)	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4600 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
05.	கள உதவியாளர்	1. கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாண் பருவம் பெற்றவர்களுக்கு, பதவி உயர்வின் மூலம் 2. நேரடி நியமனம்	1. குறைந்தபட்ச பொது கல்வித் தகுதி (பத்தாம் வகுப்பு தேர்ச்சி) (பதவி உயர்வு மூலம்) 2. 12ம் வகுப்பு தேர்ச்சி (நேரடி நியமனம்) பூச்சிகள் பரவுவதைத் தடுப்பது குறித்து சுகாதாரத் துறையில் நடத்தப்படும் கட்டாயப் பயிற்சியில், பதவி உயர்வு பெறுபவர்/ நேரடி நியமனதாரர் கட்டாயமாகப் பங்கேற்கவேண்டும்	ஊதிய விகிதம் 5200–20200 + தர ஊதியம் 2000 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
06.	ஆய்வு உதவியாளர்/ நுண்ணுயிரி–யலாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து மருத்துவ நுண்ணுயிரியலில் முதுகலை அறிவியல் பட்டம்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4900 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள்

07.	உதவி உயிர் வேதியியலாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2.நேரடி நியமனம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து இளங்கலை அறிவியல் பட்டம் (உயிர் வேதியியல்)	ஊதிய விகிதம் 5200–20200 + தர ஊதியம் 2800 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்
08.	உயிர் வேதியியலாளர்	1. உதவி உயிர் வேதியியலாளர் பதவியில் இருந்து பதவி உயர்வின் மூலம் 2. மாநில அரசில் இருந்து அயற்ப்பணி மூலம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்திடமிருந்து உயிர் வேதியியலில் முதுகலை அறிவியல் பட்டம்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4400 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜனவரி முதல் நாள்
09.	சுகாதார ஆய்வாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம் 3. பதவிமாற்றம் வழியாக	1. இளங்கலை அறிவியல் (வேதியியல்) பட்டம் 2. அரசு மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தால் நடத்தப்படும் நல ஆய்வாளர் படிப்பில் முதுகலை பட்டயம் பெற்றிருத்தல் வேண்டும். 3. கணினிப் பயிற்சியில் ஏதேனும் ஒரு சான்றிதழ்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4200 நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜூலை முதல் நாள்
10.	துப்புரவு அலுவலர்	1) சுகாதார ஆய்வாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம். சுகாதார ஆய்வாளர் பதவியில் 3 ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும்.	1. இளங்கலை அறிவியல் பட்டம் (வேதியியல்) 2. அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் சுகாதார ஆய்வாளர் பதவிக்கான படிப்பில் முதுகலைப் பட்டயம்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4500 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் முதல் நாள்
11.	மருந்தாளுநர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்) 2. தமிழ்நாடு மருந்தாளுநர் அமைப்பில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4200 நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜூலை முதல் நாள்
12	தலைமை மருந்தாளுநர்	மருந்தாளுநர் பதவியிடத்தில் இருந்து பதவி உயர்வின் மூலம்	1. அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்) 2. மருந்தியல் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4400 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள்

13.	மருத்துவப் பண்டக அலுவலர்	தலைமை மருந்தாளுநர் பதவியிலிருந்து பதவி உயர்வின் மூலம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட பட்டயம் (மருந்தியல்)	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4500 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்
14.	நகர சுகாதார செவிலியர் (Urban Health Nurse)	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2.நேரடி நியமனம்	1. 12ம் வகுப்பு தேர்ச்சி 2. 18 மாத துணை செவிலியர்/ மகப்பேறு உதவியாளர்/ பல்நோக்கு சுகாதாரப் பணியாளர்/ பயிற்சி அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும். 3) இப்பயிற்சிக்கான சான்றிதழை தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.	ஊதிய விகிதம் 5200–20200 + தர ஊதியம் 2400 மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஜூலை முதல் நாள் (நகர சுகாதார செவிலியர் பணியிடங்கள் பெண்களுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படும்)
15.	பகுதி சுகாதார செவிலியர் (Sector Health Nurse)	1) நகர சுகாதார செவிலியர் பதவியில் உள்ளவர்கள் பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	1. நகர சுகாதார செவிலியர் பதவியில் உள்ளவர்களுக்கு பணி மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு 2) 12ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பகுதி சுகாதார செவிலியர் (சுகாதாரப் பார்வையாளர்) பயிற்சி முடித்திருக்க வேண்டும். 3) இப்பயிற்சிக்கான சான்றிதழை தமிழ்நாடு பகுதி சுகாதார செவிலியர் மன்றத்தில் பதிவு செய்திருக்க வேண்டும்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4200 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஜூலை முதல் நாள் நியமனமுறையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 2:1 என்ற அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்
16	பணிச் செவிலியர்	1) நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2.நேரடி நியமனம்	1. தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலியர் மற்றும் தாதியர் பட்டயம் 2. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1A அல்லது 1B ன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ். 3. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1C ன்படி தாதியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்.	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4450 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்

17.	தாய் சேய் நல அலுவலர்	1.(அ.)பணிச் செவிலியர் அல்லது பகுதி சுகாதார செவிலியர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம் (அல்லது) (ஆ.) நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் உள்ள தகுதிகாண் பருவம் முடிக்கப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	**1.(i)** Basic B.Sc. Nursing அல்லது Post Basic B.Sc. Nursing பட்டப்படிப்பு தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் இக்கல்விச் சான்றிதழை தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும் (அல்லது) **(ii)** பணிச் செவிலியர் பதவியில் உள்ளவர்கள் 10 மாத காலப் பட்டயப்படிப்பு (Diploma in Nursing Education and Administration) முடித்திருக்க வேண்டும் இக்கல்விச் சான்றிதழை தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும் (அல்லது) **(iii)** பகுதி சுகாதார செவிலியர் பதவியில் உள்ளவர்கள் 22 மாத பொது சுகாதார செவிலிய பட்டயப்படிப்பு முடித்திருக்க வேண்டும் இக்கல்விச் சான்றிதழை தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும் **1.** அடிப்படை இளங்கலை அறிவியல் செவிலியப் பட்டப் படிப்பு (B.Sc.Nursing/ Post Basic B.Sc.Nursing), தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் **2.** தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில், தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் 1926 சட்டத்தின் கீழ், 1 (அ) அல்லது1 (ஆ) பதிவு பெற்ற செவிலியர் என பதிவு செய்திருத்தல் வேண்டும், மற்றும் 3. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் குழுமத்தில், தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் 1926 சட்டத்தின் கீழ், 1 (இ) பதிவு பெற்ற தாதியர் என பதிவு செய்திருத்தல் வேண்டும்	ஊதிய விகிதம் 9300 – 34800 + தர ஊதியம் 4700 நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாள் நியமனமுறையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 2:1 என்ற அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். **Test:- Every person appointed to the post of Maternal & Child Health Officer, shall pass the Account test for Executive Officers within a period of two years from the date of appointment, failing which, her/increment will be stopped without cumulative effect until she passes the test.
18.	உதவி செவிலி கண்காணிப்பாளர்/ பொதுநல செவிலி பயிற்சியாளர்/	பணிச் செவிலிய ர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்	1.தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலியர் பட்டயம் 2. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1A அல்லது 1B ன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4600 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்

வ. எண்.	பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச தகுதி	குறிப்பு
19.	செவிலி கண்காணிப்பாளர்	உதவி செவிலி கண்காணிப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்	1.தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலியர் பட்டயம் 2. தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926 ன்படி பிரிவு 1A அல்லது 1B ன்படி செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்.	ஊதிய விகிதம் 9300–34800 + தர ஊதியம் 4700 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்
20.	திட்ட உணவியலாளர்	நேரடி நியமனம் மூலம்	அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட இளம் அறிவியல் பட்டம் (ஊட்டச்சத்து)	ஊதிய விகிதம் 9300–34800 +தர ஊதியம் 4500 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
21.	புள்ளியியல் உதவியாளர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம்	இளங்கலை அறிவியலில் புள்ளியியல் பட்டம் அல்லது புள்ளியியல் சிறப்புப் பாடத்துடன் கணிதத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசால் அங்கிகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து கணினி படிப்பில் (Office Automation Course) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.	ஊதிய விகிதம் 9300–34800 தர ஊதியம் 4400 மைய நாள் ஒவ்வொர் ஆண்டும் ஏப்ரல் முதல் நாள் நியமனமுறையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 1:1 என்ற அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.
22.	இ.சி.ஜி. தொழில்நுட்பனர்	1. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வு மூலம் 2. நேரடி நியமனம் மூலம்	12ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து இ.சி.ஜி.டெக்னீசியன் பட்டயம் பெற்றவர்கள்	ஊதிய விகிதம் 5200–20200 தர ஊதியம் 2400 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் நாள்
23.	அடிப்படை சுகாதார பணியாளர்	1. பணிக்காலத்தில் காலம் சென்ற மாநகராட்சி பணியாளரின் வாரிசுதாரர்களை நியமனம் செய்வதன் மூலம் 2. கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாண்பருவம் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம் 3. நேரடி நியமனம்	12ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சியில் தேர்ச்சி	ஊதிய விகிதம் 4800–10000 +தர ஊதியம் 1650 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்

வ. எண்.	பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச தகுதி	குறிப்பு
24.	சுகாதார ஆய்வாளர் நிலை–II	15 வருடம் பணி முடித்த மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையால் நடத்தப்படும் 6 மாத கால பல்நோக்கு சுகாதார ஆய்வாளர் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற அடிப்படை சுகாதார பணியாளர்கள் பதவி மாற்றம் மூலம்	12ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சியில் தேர்ச்சி	ஊதிய விகிதம் 5200–20200 + தர ஊதியம் 2000 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் ஆகஸ்ட் முதல் நாள் தகுதியான அடிப்படை சுகாதார பணியாளர்களுக்கு மன்றத்தின் அனுமதி பெற்று பல்நோக்கு சுகாதார பணியாளர் பயிற்சிக்கு அனுப்பப்பட வேண்டும்.
25.	தொகுப்பாளர் (ம) எழுத்தர் (Computor –Cum-Clerk)	1. தகுதிகாண் பருவம் முடித்த இளநிலை உதவியாளர்/ தட்டச்சர் பணியிடத்திலிருப்பவரை பதவி உயர்வு மூலமாக (அல்லது) 2. நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலைப் பதவிகளில் தகுதிகாணப் பெற்றவர்களுக்கு பதவி உயர்வின் மூலம்	1. அ) குறைந்த பட்சம் கல்வித்தகுதி பெற்றிருக்க வேண்டும் , ஆ)சார்நிலை பணியாளருக்கான கணக்கு தேர்வு பாகம் -I, தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வு மற்றும் தமிழ்நாடு அரசால் அங்கிகரிக்கப்பட்ட தொழிற்நுட்ப கல்வி நிலையத்திலிருந்து கணிணி படிப்பில் (Office Automation Course) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 2. அ) இளங்கலை அல்லது முதுகலையில் /அறிவியல் /கணிதம் /புள்ளியியல்/ வணிகவியல் /பொருளாதாரம் இவற்றில் ஏதாவதொரு பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆ) சார்நிலை பணியாளருக்கான கணக்கு தேர்வு பாகம் -I, தமிழ்நாடு அலுவலக கையேடு தேர்வு மற்றும் தமிழ்நாடு அரசால் அங்கிகரிக்கப்பட்ட தொழிற்நுட்ப கல்வி நிலையத்திலிருந்து கணிணி படிப்பில் (Office Automation Course) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 3. அ) இளங்கலை அல்லது முதுநிலையில் /அறிவியல் /கணிதம் /புள்ளியியல்/ வணிகவியல் /பொருளாதாரம் இவற்றில் ஏதாவதொரு பட்டம் பெற்றிருக்க வேண்டும். ஆ) தமிழ்நாடு அரசால் அங்கிகரிக்கப்பட்ட தொழிற்நுட்ப கல்வி நிலையத்திலிருந்து கணிணி படிப்பில் (Office Automation Course)	ஊதிய விகிதம் 5200–20200+தர ஊதியம் 2800 நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஜூலை முதல் நாள் நியமன முறையில் பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாசாரம் 2 : 1 என்ற அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்.

		3.நேரடி நியமனம்	தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். (சார்நிலை பணியாளருக்கான கணக்கு தேர்வு பாகம் -I மற்றும் தமிழ்நாடு அலுவலக நடைமுறை தேர்வு ஆகியவற்றில் பணி நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.)	

வகுப்பு–4

வ. எண்.	பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச தகுதி	குறிப்பு
26.	இளநிலை சமையலர்	1. நேரடி நியமனம் மூலம் 2. பணிமாற்றம் மூலம்	அங்கீகரிக்கப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்ப நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட உணவாக்கத் தொழில்நுட்பப் பட்டயம்	ஊதிய விகிதம் 4800–10000 + தர ஊதியம் 1300 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
27.	மயான உதவியாளர்	1. நேரடி நியமனம் மூலம்	1) 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும், 2) இடுகாடு தொழிலில் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்	ஊதிய விகிதம் 4800–10000 + தர ஊதியம் 1300 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
		2. துப்புரவு பணியாளர் பதவியிலிருந்து பணிமாற்றம் அடிப்படையில்.	1) 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்,	
வ. எண்.	**பதவியின் பெயர்**	**நியமன முறை**	**நிர்ணயிக்கப்படும் குறைந்த பட்ச தகுதி**	**குறிப்பு**
28	ஆண் இரண சிகிச்சையாளர் /பெண் இரண சிகிச்சையாளர்	நேரடி நியமனம் முலம்	1.8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் மற்றும் இந்தியன் ஆர்மியின் முன்றாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆங்கில சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும் 2. உதவி செவிலி பணியாளர் (Nursing Assistant) பயிற்சியில் தேர்ச்சி (சென்னை மாநகராட்சி தொற்றுநோய் மருத்துவ மனையில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை.) அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயின்று இருக்க வேண்டும்.	ஊதிய விகிதம் 4800–10000 + தர ஊதியம் 1300 நிர்ணய நாள் ஒவ்வோராண்டும் அக்டோபர் முதல் நாள்
குறிப்பு : – பதவி உயர்வு மூலம் நிரப்புவதற்கு தகுதியான பணியாளர்கள் இல்லாத நிலையில் அப்பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்படும்				

5. தகுதிகாண் பருவம்:– **வகுப்பு–IIன் பதவி** – ஒரு பதவியில் நேரடி நியமனம் செய்யப்பட்டவருக்கு தகுதிகாண் பருவம் தொடர்ச்சியான மூன்றாண்டு பணியில் இரண்டாண்டுகள், அவர் பதவியில் சேரும்போது தகுதிகாண் பருவமாக இருக்கும்.

வகுப்பு–IVன் பதவி - நேரடியாக நியமனம் செய்யப்பட்ட அல்லது பணியிட மாற்றம் மூலம் நியமனம் செய்யப்பட்ட நபரை பொருத்தவரை, தொடர்ந்து இருக்கும் மூன்று ஆண்டுகளில் ஓராண்டு காலம் என்று தகுதிகாண் பருவம் இருக்கும்

6. நியமனங்களில் ஒதுக்கீடு:– எந்த ஒரு பதவியிலும், நேரடி நியமனங்களில் நியமனங்களுக்கான ஒதுக்கீடு விதிகள் (பொது விதிகள் 22) பொருந்தும்.
7. தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சிப் பெறுதல்:– ஒரு பணியின் ஒரு வகையில் நியமனம் செய்யப்பட்ட தமிழை தவிர வேறு மொழியை முதல் மொழியாக பயின்றவர்கள், அவர்கள் தகுதிகாண் பருவ காலகட்டத்திற்குள் (அதாவது இரண்டு ஆண்டுகள்) தமிழ்நாடு தேர்வாணையத்தினால் நடத்தப்படும் தமிழ் மொழித் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். தவறினால், அவர்கள் அந்த தகுதியினை பெறும் வரையில் அவர்களின் ஆண்டு ஊதிய உயர்வு மூன்றாம் ஆண்டிலிருந்து நிறுத்தி வைக்கப்படும். அவர்கள் தமிழ்மொழி தேர்வில் பணியில் சேர்ந்த நாளிலிருந்து 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறவேண்டும். தவறினால் அவர்கள் உடனடியாக பணிநீக்கம் செய்யப்படுவார்கள்.
8. ஊர்திப்படி:– இப்பணியமைப்பில் உள்ள பணியிடங்களில் ஊர்திப்படி அனுமதிக்கப்பட்ட பதவிளுக்கு மட்டும் மாநகராட்சி நிதியிலிருந்து அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் வரையறைகளுக்குட்பட்டு ஊர்திப்படி வழங்கப்படவேண்டும்.
9. ஊதியப் படிகள், விடுப்பூதியம், ஓய்வூதியம், வருங்கால வைப்பு நிதி மற்றும் இன்ன பிற பணி நிலைமைகள்:– மாநகராட்சிப் பணியமைப்பில் உள்ள பணிகளுக்கான ஊதியங்களை முறைப்படுத்தும் விதிகள், அடிப்படை விதிகள் மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள விதிகள், அவைகள் எந்த அளவுக்கு பொருந்துமோ அந்த அளவிற்கும், எந்த அளவுக்கு பொருந்தாதோ அந்த அளவு தவிர, ஒவ்வொரு மாநகராட்சிப் பணியாளர்களுக்கும் அவர்களின் ஊதியம், படிகள், விடுப்பூதியம், ஓய்வூதியம் மற்றும் இன்ன பிற பணி நிலைமைகள் ஆகியவற்றிற்கு பொருந்தும்.

10.ஒரு வழி பணியிட மாறுதல் / மனமொத்த பணியிடமாறுதல் பெறுதல்:–

ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கோ அல்லது மாநகராட்சியிலிருந்து, நகராட்சிக்கோ, நகராட்சியிலிருந்து மாநகராட்சிக்கோ, இத்துறையின் பதவியில் உள்ளவர்கள் ஒருவழி பணியிடமாறுதல் / மனமொத்த பணியிட மாறுதல் பெற விரும்பினால், இத்துறையில் காலிப்பணியிடம் இருந்து அன்னாரை எடுத்து கொள்ளலாம் என கருதினால் அதற்கான குறிப்பு ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெற்று மன்றத்தீர்மானம் நிறைவேற்றி அந்த நகலுடன் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு எடுத்து கொள்ளும் மாநகராட்சி அனுப்பி வைக்க வேண்டும். நகராட்சி நிர்வாக இயக்குநர் இதனை பரிசீலித்து தனது குறிப்புகளுடன் அரசுக்கு அனுப்பி அரசாணை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

CORPORATION OF CHENNAI
CHENNAI CORPORATION HEALTH AND FAMILY WELFARE SUB-ORDINATE SERVICES REVISED BYE-LAWS- 2009

1. **Short title and commencement** – These bye-laws shall be called the Chennai Corporation Health and Family Welfare Sub-ordinate Service Revised Bye-laws 2009.

2. **Constitution** – The service shall consists of the following categories of posts in the Class-III and Class-IV Services of the Corporation of Chennai, namely:-

CLASS-III

Category-1 - Junior Analyst
Category-2 - Statistical Supervisor
Category-3 - Laboratary Technician
Category-4 - Junior Entomologist
Category-5 - Field Assistant
Category-6 - Research Assistant/Micro Biologist
Category-7 - Asst. Bio-Chemist
Category-8 - Bio-Chemist
Category-9 - Sanitary Inspector
Category-10 - Sanitary Officer
Category-11 - Pharmacist
Category-12 - Chief Pharmacist
Category-13 - Medical Store Officer
Category-14 - Urban Health Nurse
Category-15 - Sector Health Nurse
Category-16 - Staff Nurse
Category-17 - Maternal & Child Health Officer (MCHO)
Category-18 - Assistant Nursing Superintendent/Public Health Nursing Trainer
Category-19 - Nursing Superintendent
Category-20 - Dietician
Category-21 - Statistical Assistant

Category-22 - E.C.G. Technician
Category-23 - Basic Health Worker
Category-24 - Sanitary Inspector Grade-II
Category-25 - Computor cum Clerk

CLASS-IV

Category-26 - Junior Cook
Category-27 - Burial Ground Assistant
Category-28 - Male Ward Attender/Female Ward Attender

3. **Appointment:-** Appointment to the posts specified in column (2) of the table below shall be made by the methods specified in the corresponding entries in column (3) thereof.
4. The rules in Corporation Subordinate Services Revised Bye-laws as prescribed in part I shall be applicable to Health, Malaria and Family Welfare Department.

CLASS- III

Sl. No.	Category of Post	Method of Recruitment	Minimum Qualification	Remarks
01.	Junior Analyst	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By deputation from the State Government. 2) By direct Recruitment	M.Sc. Degree with Chemistry or Bio-Chemistry or Dairy Chemistry or Food Technology or Micro biology or food and Drugs from recognised University, established in India.	Pay Scale Rs.9300-34800 +Grade Pay Rs.4600 Crucial date: January of every year
02.	Statistical Supervisor	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By deputation from the State Government. 3) By direct Recruitment	1) M.Sc. degree with Statistics as the main subject. 2) Diploma in Bio Informatics	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4400 Crucial date: 1st January of every year
03.	Lab. Technician	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By direct Recruitment	1) 12th std Pass. 2) 2 years Diploma in Medical Lab. Technician Course in institutions approved by Government of Tamil Nadu	Pay Scale Rs.9300 -34800 + Grade Pay Rs.4200 Crucial date: 1st July of every year
04.	Junior Entomologist	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By Direct Recruitment	M.Sc.(Zoology) or M.Sc.(Medical Entomology) from the Universities recognised by Government	Pay scale 9300-34800 + Grade pay Rs.4600 Crucial date: 1st October of every year
05.	Field Assistant	1) By promotion of approved probationers from the lower categories, 2) By Direct Recruitment	1) Minimum General educational qualification 10th std. pass. (By Promotion) 2) 12th Std Pass (By Direct Recruitment) The promotee/the direct recruitee should undergo compulsory training to be imparted by Government Health Department regarding vector control services	Pay Scale Rs.5200-20200 + Grade Pay Rs.2000 Crucial date: 1st October of every year

06.	Research Assistant/ Micro Biologist	1. By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2.By Direct Recruitment	M.Sc. in Medical Micro-Biology from the Universities recognized by Government	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4900 Crucial date: 1st January of every year
07.	Asst. Bio-Chemist	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By direct Recruitment	B.Sc. Bio-Chemistry from the Universities recognized by Government	Pay Scale Rs.5200-20200 + Grade Pay Rs.2800 Crucial date: 1st April of every year
08.	Bio-Chemist	1) By promotion from the post of Asst. Bio-Chemist 2) By deputation from Government	M.Sc. Bio-Chemistry from the Universities recognized by Government	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4400 Crucial date: 1st January of every year
09.	Sanitary Inspector	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By direct Recruitment 3) By transfer of service	1) B.Sc. degree with Chemistry in main subject 2) P.G. Diploma in Sanitary Inspector course conducted by Government and Institutions recognized by the Government 3) Certification in Computer courses	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4200 Crucial date: 1st July of every year
10.	Sanitary Officer	1) By promotion from Sanitary Inspectors. Must have completed of 3 Years of service as a Sanitary Inspector	1. B.Sc. Degree with Chemistry as the main subject 2. P.G. Diploma in Sanitary Inspector Course conducted by Government recognized Institution	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4500 Crucial date 1st August of every year
11.	Pharmacist	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2) By direct Recruitment	1) Diploma in Pharmacy from the Recognised Institution approved by Government. 2) Should be registered in Tamil Nadu Pharmacy Council	Pay Scale Rs.9300-34800+Grade Pay Rs.4200 Crucial date: 1st July of every year
12.	Chief Pharmacist	By promotion from the category of Pharmacist	1) Diploma in Pharmacy from the Recognized Institution approved by Government. 2) Should be registered in the Pharmacist Council.	Pay Scale Rs.9300-34800 +Grade Pay Rs.4400 Crucial date: 1st July of every year
13.	Medical Store Officer	By Promotion from the post of Chief Pharmacist	Diploma in Pharmacy from the Recognized Institution approved by Government.	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4500 Crucial date: 1st April of every year

14.	Urban Health Nurse	1. By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2.By direct recruitment	1) 12th std. pass 2) 18 months training in M.P.H.W./A.N.M./ Maternity Assistant Course from the recognized Government Institution. 3) Must have registered in Tamilnadu Nursing & Midwives Council.	Scale of Pay 5200-20,200 + GP 2400 Crucial date: 1st July of every year (The posts of ANM, Maternity Assistants shall be reserved only for women candidates)
15.	Sector Health Nurse	1. By promotion from the holder of the post of Urban Health Nurse 2. By Direct Recruitment	1.Promotion for the Urban Health Nurse based on the seniority of service. 2. 12th Passed and Must have passed the Lady Health Visitor Training course 3. Must have Registered in the Health Visitor Council by Government of Tamilnadu.	Scale of Pay 9300-34,800 + GP 4200 Crucial date: 1st July of every year Appointment to be through Promotion & Direct recruitment in the ratio of 2:1 (Promotion : Direct Recruitment)
16.	Staff Nurse	1) By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2)By direct recruitment	1) Diploma in Nursing from institutions recognised by Govt. of Tamil Nadu and TamilNadu Nursing Council 2. A certificate of registration in Section 1A or 1B of the Register of Nurses under the TamilNadu Nurses and Midwives Act 1926 3. A certificate of registration in Section 1C of the Register of Midwives under the TamilNadu Nurses and Midwives Act 1926	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4450 Crucial date: 1st April of every year
17.	Maternal & Child Health Officer (MCHO)	1.(a) By promotion from the holder of the post of Staff Nurse or Sector Health Nurse (or) (b)By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2. By direct recruitment	1. (i.) B.Sc.Nursing/Post Basis B.Sc.Nursing from Government recognized University and registered in Tamilnadu Nurses & Midwives council. (or) (ii.) Staff Nurses must have successfully undergone 10 months Diploma Course in Diploma in Nursing Education and Administration registered by Tamilnadu Nurses & Midwives Council. (or) (iii.) Sector Health Nurse must have successfully undergone 22 months Diploma Course in Public Health Nursing and registered by Tamilnadu Nurses & Midwives Council 1.(i.)B.SC.Nursing/Post Basis B.Sc. Nursing from Government recognized University. (and)	Scale of Pay Rs. 9300-34,800 + GP 4700 Crucial date: 1st April of every year Appointment to be done through Promotion & Direct recruitment in the ratio of 2:1 (Promotion: Direct Recruitment)

			(ii.) A certificate of registration as Registered Nurse in TamilNadu Nurses and Midwives Council as per Act 1A or 1B of 1926 act. (and) (iii) A certificate of registration as Registered Midwives in TamilNadu Nurses and Midwives Council as per the Tamilnadu Midwives 1926 Act 1E.	**Test:- Every person appointed to the post of Maternal & Child Health Officer, shall pass the Account test for Executive Officers within a period of two years from the date of appointment, failing which, her/increment will be stopped without cumulative effect until she passes the test.
18.	Assistant Nursing Superintendent/Public Health Nursing Trainer	By Promotion From the holder of the post of Staff Nurse	1) Dilploma in Nursing from TamilNadu Government or Government Recognized Institutions 2) A certificate of registration in Section 1A or 1B of the Register of Nurses under the TamilNadu Nurses and Midwives Act 1926	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4600 Crucial date: 1st April of every year
19.	Nursing Superintendent	By promotion from the post of Assistant Nursing Superintendent.	1) Dilploma in Nursing from TamilNadu Government or Government Recognized Institutions 2)A certificate of registration in Section 1A or 1B of the Register of Nurses under the TamilNadu Nurses and Midwives Act 1926	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4700 Crucial date: 1st April of every year
20.	Dietician	By direct recruitment	B.Sc. - Nutrition from Government Recognized institutions.	Pay Scale Rs.9300-34800 + Grade Pay Rs.4500 Crucial date: 1st October of every year
21.	Statistical Assistant	1. By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2. By direct recruitment	Degree in Statistics or Degree in Maths with Statistics as allied subject (and) Passed Office Automation course from Technical Institute recognized by Government of Tamilnadu.	Scale of Pay Rs.9300-34800 +Grade Pay Rs.4400 Crucial date: 1st April of every year. Appointment to be through Promotion & Direct recruitment in the ratio of 1:1 (Promotion : Direct Recruitment)

22.	E.C.G. Technician	1. By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment 2. By direct recruitment	+2 passed with Diploma in E.C.G. Technician from the recognized Institute of Government.	Pay Scale Rs.5200-20200 + Grade Pay Rs.2400 Crucial date: 1st Aprils of every year
23	Basic Health Worker	1) From the Legal heirs of the Corporation employees died in harness 2) By promotion of approved probationers from the lower categories, 3) Direct Recruitment	Must have passed in Higher Secondary Examination (10, +2) (and) Must have passed in Multi Purpose Health Worker Training .	Pay Scale Rs.4800-10000 + Grade Pay Rs.1650 Crucial date 1st October of every year
24.	Sanitary Inspector Grade-II	By Transfer from the post of Basic Health Worker on Completion of 15 years of service and also qualified in Multi Purpose Health Worker six months training course conducted by TamilNadu Pubuic Health and Preventive Medicine Department .	Must have passed in Higher Secondary Examination (10, +2) (and) Must have passed in Multi Purpose Health Worker Training .	Pay Scale Rs.5200-20200 + Grade Pay Rs.2000 Crucial date 1st August of every year
				Approval of Council should be obtained to permit the eligible Basic Health Worker to undergo Training
25.	Computor-Cum-Clerk	1.By Promotion From the holder of the post of Junior Assistant/Typist (or) 2. By promotion of approved probationers from the lower categories, who have acquired the qualification prescribed for direct recruitment	**1.(a)**Minimum General Education Qualification. **(b)** Must have passed Departmental Exam Subordinate Officer Account Test Part-I, Government Office Manual Test and Computer Knowledge in Office Automaton from the Recognized Institution approved by Government of Tamilnadu. **2. (a)**Must have Passed the any one degree Graduation/Post Graduation in Commerce/Science/ Economics/Maths/ Statistical **(b)** must have passed Departmental Exam Subordinate Officer Account Test Part-I, Government Office Manual Test and Computer Knowledge in Office Automaton from the Recognized Institution approved by Government.	Scale of Pay 5200-20,200 + GP 2800 Crucial date: 1st July of every year Every year the appointment to be through promotion and direct recruitment in the ratio of 2 : 1 (Promotion : Direct Recruitment)

		3. By direct recruitment	**3.(a)**Must have Passed the any one degree Graduation/Post Graduation in Commerce/Science/ Economics/Maths/ Statistical. **(b)**Computer Office Automation from the Recognized Institution approved by Government. (Must have passed Departmental Exam Subordinate Officer Account Test Part-I, Government Office Manual Test and passed in with in Two Years from Date of Appointment)	

CLASS – IV

Sl. No.	Category of Post	Method of Recruitment	Minimum Qualification	Remarks
26.	Junior Cook	1) By direct recruitment 2) By transfer of service	Diploma in catering technology from the recognised Institute of Catering Technology.	Pay Scale Rs.4800-10000 + Grade Pay Rs.1300 Crucial date 1st October of every year
27.	Burial Ground Assistant	1) By direct recruitment	1) Must have passed 8th Standard and be able to read and write Tamil language. 2) Should have prior experience on burial ground work.	Pay Scale Rs.4800-10000 + Grade Pay Rs.1300 Crucial date 1st October of every year
		2) By transfer basis from Conservancy Worker	1) Must have passed 8th Standard and be able to read and Write Tamil language.	
28.	Male Ward Attender / Female Ward Attender	By Direct Recruitment	1) Must have Passed in 8th Standard and should have passed in Indian Army IIIrd Class English Certificate 2) Should have qualified in Nursing Assistant Training (Preference will be given those who have trained in Communicable Diseases Hospital) studied in Govt. Recognized Institution.	Pay Scale Rs.4800-10000 + Grade Pay Rs.1300 Crucial date 1st October of every year
Note : In case of Non-availability of eligible hands for recruitment by promotion, post may be filled up by direct recruitment				

5. **Probation: - <u>Class-III Post</u> -** A person appointed to any post in any category by direct recruitment shall from the date on which he joins duty, be on probation for a period of 2 years within a continuous period of 3 years.

<u>Class-IV-Post -</u> The period of probation in the case of appointed by direct recruitment or by recruitment by transfer shall be total period of one year duty with in a continuous period of three years.

6. Reservation of Appointments:- The rule of reservation of appointments to the Backward classes, Scheduled Caste and Scheduled Tribes in Rule 22 of the General Rules for the State and Sub-ordinate Services of the Government of Tamil Nadu for the time being in force shall apply to appointment to the service by direct recruitment.

7. Passing of Tamil Language Test: Every person appointed to a category whose first language is other than Tamil should pass the Tamil Language Test conducted by the Tamil Nadu Public Service Commission within the period of probation (i.e. 2 years) failing which, the increments will be stopped from 3rd year onwards till they qualify. They must pass the Tamil Language Test within the period of 5 years from the date of entry in service. Otherwise their service will be terminated forthwith.

8. Conveyance Allowance: - There shall be paid to the holders of the posts in this service for which conveyance allowance is sanctioned conveyance allowance from the Municipal Fund at such rates and subject to such conditions as may be determined by the State Government.

9. Pay Allowances, Leave, Leave Salary, Pension, Provident Fund and Other conditions of Service:- The Chennai Corporation, Class-III and Class-IV Services (Discipline and Appeal) Bye-laws, the Chennai Corporation, Class-III and Class-IV Servant's Conduct Bye-laws, and the Rules of the State Government, regulating the pay of the Corporation Services, Fundamental Rules, the Tamil Nadu State and Sub-ordinate Services Rules, the Tamil Nadu Leave Rules, the Pension Rules, the General Provident Fund Rules and the Family Pension Rules for the time being in force shall, mutatis mutandis govern the members of this service, in the matter of their pay, allowance, leave salary in pension and other conditions of service.

10. **One way transfer / Mutual transfer :-** Every person who wishes for transfer either by one way or mutual from one Corporation to other Corporation / Municipality and if there is a vacancy for that particular post, should be approved by the Commissioner and passed in the Council. The copy of the same should be sent to the Directorate of Municipal Administration. The Directorate of Municipal Administration will forward to the Government with remarks for necessary action.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பொ.து.ந.க.எண். ஈ3 / 40614 / 2015
முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 18.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.610/2015 **பொருள் எண்.20**

பணியமைப்பு

கூடுதல் தலைமைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் (பொ) அவர்களின் கடிதம், எண். பணி 1 (3) / DC 73 /2015, நாள்: 06.08.2015ன்படி, திரு.சு.சாரதி கணேசன், முன்னாள் தனித்துணை ஆட்சியர் (நிலமெடுப்பு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம், அவர்கள் சென்னை மாநகராட்சியில் மத்திய வட்டார துணை ஆணையர் அலுவலகத்தில் துணை ஆட்சியர் (வருவாய்) ஆக அயற்பணியில் 14.09.2015 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவல் மற்றும் பதிவிற்காகவும் வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
****

ம.அ14.ந.க.எண்.அ10/4924/2015
முதன்மை செயலர் /ஆணையர் அவர்களின் 23.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.611/2015 **பொருள் எண்.21**

தானப்பத்திரம்

மண்டலம்–14, வார்டு எண்–190ல் உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் சர்வே எண். 171/1B2, 2B1, 2B2, 2B3, 2B4 & 2C பள்ளிக்கரணை கிராமத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் செய்ய வேண்டி சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தினை மனுதாரர் திரு.M.ஜோன்ஸ் அவர்களிடமிருந்து தானபத்திரம் மூலம் பெற்றுக் கொண்டு, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு தெரியபடுத்துமாறு கடித எண்.L1/4457/2015, நாள்.19.05.2015ல் தெரிவித்துள்ளார்.

புதிய ஒரு சாலை அமைப்பதற்கு ஒதுக்கப்படும் நிலத்தினை மனுதாரர் சென்னை பெருநகர் வளர்சசிக் குழுமத்திற்கோ அல்லது உள்ளாட்சி அமைப்புக்கோ பதிவு செய்யப்பட்ட தானபத்திரத்தின் மூலம் திட்ட அனுமதி வழங்குவதற்கு முன்பே ஒப்படைக்க வேண்டும்.

திரு. M. ஜோன்ஸ் அவர்கள் சர்வே எண். 171/1B2, 2B1, 2B2, 2B3, 2B4 & 2C, பள்ளிக்கரணை கிராமத்தில் உள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு செய்ய வேண்டி சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். இம்மனைப்பிரிவை ஒப்புதல் செய்ய வேண்டி சாலைக்கென 328 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று உறுப்பினர்–செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிலத்தினை ஒப்படைப்பதற்கு இசைவு தெரிவித்து, வரைவு தானப்பத்திரத்தை திரு.M.ஜோன்ஸ் அவர்கள் சமர்ப்பித்துள்ளார். மேலும், மனுதாரர் சாலை அமைப்பதற்கு தோராய அபிவிருத்தி கட்டணம் ரூ.3,96,474/– (ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று எழுபத்து நான்கு மட்டும்) செலுத்துவதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

ஆகவே, சாலைக்கென ஒதுக்கப்பட்ட இந்நிலத்தினை தானப்பத்திரம் மூலம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. மேற்படி சாலைக்கென ஒதுக்கப்பட்ட இந்நிலத்தினை தானப்பத்திம் மூலம் எடுத்துக் கொள்ளலாம் என வார்டு குழு தீர்மான எண்.415, நாள்.10.08.2015ன்படி பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே,

(1) பெருங்குடி, மண்டலம்–14, வார்டு–190ல் சர்வே எண்கள் 171/1B2, 2B1, 2B2, 2B3, 2B4 & 2C பள்ளிக்கரணை கிராமத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் வேண்டிய இடத்தில் சாலை அமைப்பதற்கு தேவையான 328 ச.மீ நிலத்தினை திரு.M.ஜோன்ஸ் அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலை அமைப்பதற்கு தேவையான தோராய அபிவிருத்தி கட்டணமாக ரூ.3,96,474/– (ரூபாய் மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து நானூற்று எழுபத்து நான்கு மட்டும்) மனுதாரரிடமிருந்து வசூலிப்பதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 13.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.43/2015ன்படி இதற்கு நிலைக்குழு(நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பொ.து.ந.கஎண்.ஈ2/6487/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 05.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.612/2015 பொருள் எண்.22

திரு.கே.ரவிசந்திரன், உதவி வருவாய் அலுவலர் அவர்களுக்கு ஏற்கனவே 15.05.2010ஐ மையநாளாக கொண்டு வெளியிடப்பட்ட உதவி வருவாய் அலுவலருக்கான தெரிவுப்பட்டியலில் மூப்பு நிலை மறுநிர்ணயம் செய்து பணப்பயன்கள் வழங்க அரசினை கோருவதற்கு அனுமதி

சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு 15.05.2010ஐ மைய நாளாகக் கொண்ட தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் தருவாயில் இப்பதவி உயர்வுக்கு தேவையான ஊட்டப்பதவியில் (வரி மதிப்பீட்டாளர்) 5 ஆண்டு கால பணித்தகுதியினை எந்த வரி மதிப்பீட்டாளரும் பெற்றிருக்கவில்லை என்பதால் இந்த விதியை தளர்வு செய்து கீழ்கண்ட நபர்களைக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தீர்மானம் எண்.442/2010, நாள்: 29.10.2010ல் அனுமதி பெறப்பட்டது.

1. திரு.என்.நித்தியானந்தம்
2. திரு.ப.பூ.மகேந்தர்
3. திரு.எம்.கே.அப்துல் ரவூப்
4. திரு.ஜி.டி.கிரிதர்
5. திரு.கே.பி.பானுசந்திரன்
6. திரு.பு.தமிழ்
7. திரு.கே.ரவிச்சந்திரன்
8. திரு.என்.பாலசந்தர்
9. திரு.ஏ.நடராஜன்
10. திரு.ட்டி.கருணாகரன்

இதன்படி இந்த தெரிவுப்பட்டியல் ஆண்டில் (15.05.2010 முதல் 14.05.2011) மொத்தம் 6 காலிப்பணியிடங்கள் மட்டும் ஏற்பட்டதால், தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1 முதல் 6 வரை இடம்பெற்றிருந்த 6 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அரசாணை எண்.107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்: 18.08.2009ல் பள்ளி இறுதி தேர்வு மற்றும் பள்ளி மேல்நிலை கல்வி தேர்வு ஆகியவைகளில் தேர்ச்சி பெற்ற பின்னர் திறந்தவெளி பல்கலைக் கழகங்கள் வழியாக பெறப்படும் பட்டயம் / பட்டம் / முதுகலை பட்டங்களை மட்டும் பொதுப்பணிகளில் நியமனம் / பதவி உயர்வு பெற அங்கீகரித்து ஆணை வழங்கியதன் அடிப்படையில் மேற்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.என்.நித்தியானந்தம், என்ற வரி மதிப்பீட்டாளரின் பெயரை தெரிவுப்பட்டியலுக்கு பரிசீலிக்க இயலாது. எனினும் இவர் பியுசி கல்வித் தகுதிகள் பெறாமல் திறந்தவெளி பல்கலை கழகத்தின் அடிப்படை படிப்பு பிரிவில் (II year foundation course) தேர்ச்சி பெற்று இளங்கலை பட்டம் பெற்றிருந்ததாலும், அரசாணை எண்.528, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (PER R) துறை, நாள்: 18.05.1985ல் இரண்டாண்டு அடிப்படை பிரிவு படிப்பு +2 படிப்புக்கு சமம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், இந்த ஆணையை ரத்து செய்து அரசாணை எண்.107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்(எம்) துறை, நாள்: 18.08.2009ல் ஆணை ஏதும் பிறப்பிக்கப்படவில்லை என்பதாலும், இவ்வரசாணையினை நடைமுறையில் உள்ளதாக கருதலாம் என்பதாலும், இதே போல மற்றொரு நிகழ்வில் அரசின் தெளிவுரை கோரப்பட்டு, பதில் எதிர்பார்க்கப்பட்டிருந்ததாலும், (பொ.து.ந.க.எண்.ஈ2/11825/2010), திரு.என்.நித்தியானந்தம் என்பவர் பெயரை இவரது கல்வித்தகுதி ஏற்கத்தக்கதல்ல என அரசாணை பிறப்பிக்கப்பட்டால், இவரது பணிநியமனம் இரத்து செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்பட்டு 08.11.2010 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக பதவி உயர்வு வழங்கப்பட்டது. எனினும் இவருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான ஊதியம் வழங்கப்படவில்லை. மேலும் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை படுத்தப்படவில்லை.

இதற்கு பின்னர் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் கடித எண்.33448/எம்/10–4, நாள்: 03.12.2010ல் இரண்டாண்டு அடிப்படை கல்வி பயின்று திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டப்படிப்பு பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு தகுதியுடையதல்ல என தெரிவிக்கப்பட்டு இக்கடிதம் 16.08.2011 நாளிட்ட அரசு கடிதம் மூலமாக இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றதால் திரு.என்.நித்தியானந்தம் என்பவரை 12.09.2011 நாளிட்ட ஆணையின்படி பதவி இறக்கம் செய்யப்பட்டது.

இந்நேர்வில், திரு.என்.நித்தியானந்தம் என்பவரின் கல்வித்தகுதி ஏற்க தக்கதல்ல என்ற விவரம், தனியருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்ட பின், அதாவது 16.08.2011 நாளிட்ட அரசு கடிதம் கிடைத்தப் பின்னர் தான் அறியபட்டது. எனவே, 15.05.2010ஐ மைய நாளாக கொண்டு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வுக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் போது, இவ்விவரம் முன்னரே அறிய வராததால் திரு.என்.நித்தியானந்தம் என்பவரது பெயரை 29.10.2010 நாளிட்ட தெரிவுப்பட்டியலில் நிபந்தனைக்குட்பட்டு சேர்த்து பதவி உயர்வு வழங்கும் நிலை ஏற்பட்டது.

மேற்படி, திரு.என்.நித்தியானந்தம், பதவியிறக்கம் செய்யப்பட்டதால், அந்த காலிப்பணியிடத்தில் தனது பெயரை உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில், மூப்புநிலை நிர்ணயம் செய்யுமாறு திரு.கே.ரவிச்சந்திரன், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் 11.02.2015 நாளிட்ட கோரிக்கை கடிதம் அளித்திருந்ததால், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் கடித எண்.33448/எம்/10–4, நாள்.03.12.2010ல் இரண்டாண்டு அடிப்படை கல்வி பயின்று திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பெற்ற பட்டப்படிப்பு, பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு தகுதியுடையதல்ல என தெரிவிக்கப்பட்டு இக்கடிதம் 16.08.2011 நாளிட்ட அரசு கடிதத்தின் மூலமாக இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்றதால் திரு.என்.நித்தியானந்தம் என்பவரை 12.09.2011 நாளிட்ட ஆணையின்படி பதவி இறக்கம் செய்யப்பட்டது எனவும், இவரை பதவியிறக்கம் செய்யப்பட்ட காலிப்பணியிடம், அடுத்து வரும் தெரிவுப்பட்டியலின் மைய நாளான 15.05.2011ற்கு பிறகு ஏற்பட்ட காலிப்பணியிடம் என்பதால் இக்காலிப்பணியிடத்தை தனியரை கொண்டு நிரப்ப இயலாத நிலை ஏற்பட்டது என்ற விவரத்தை 06.03.2015 நாளிட்ட கடிதம் வாயிலாக தனியருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேற்படி, தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.7ல் இடம்பெற்றிருந்த திரு.கே.ரவிச்சந்திரன், உதவி வருவாய் அலுவலர் அவர்களின் கடிதத்தில், தனது பெயரினை உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு, 15.05.2010க்கான தெரிவுப்பட்டியலில் திரு.என்.நித்தியானந்தம், அவர்கள் உரிய கல்வித்தகுதி பெறாததால், அவருடைய பெயருக்கு பதிலாகவும் மற்றும் திரு.ப.பூ.மகேந்தர், அவர்களின் பெயருக்கு அடுத்ததாகவும், மறுநிர்ணயம் செய்து அந்த ஆண்டு தெரிவுப்பட்டியலில் தனது பெயரினை சேர்த்து மூப்பு நிலையை நிர்ணயம் செய்யும்படி கோரியிருந்ததாகவும், அரசு கடிதம் எண்.33448/ஆ/2010–4, பணியாளர் நிர்வாகம் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்: 03.12.2010ன்படி இரண்டாண்டு அடிப்படை கல்வி பயின்று திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் பெற்ப்பட்ட பட்டப்படிப்பை, பணிநியமனம் மற்றும் பதவி உயர்வுக்கு தகுதியுடையது அல்ல என தெரிவிக்கப்பட்டதால், அன்னாரை பதவியிறக்கம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி கடிதம் இவ்வலுவலகத்திற்கு 16.08.2011 அன்று தான் கிடைக்கப்பெற்றதால் தனது கோரிக்கை ஏற்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்சொல்லிய 03.12.2010 நாளிட்ட அரசு கடிதம் வெளியாகும் சமயத்தில் உதவி வருவாய் அலுவலர் பதவிக்கு தகுதி அல்லாத நபரை பணிமூப்பு பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு எனக்கு அந்த ஆண்டே அல்லது 2011 ஆம் ஆண்டோ தனக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டிருக்க வேண்டுமெனவும், இந்த விதியினை உரிய காலத்தில் பின்பற்றப்படாததால் தனது எதிர்காலம் பதவி உயர்வு மற்றும் பணப்பயன்கள் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், ஆதலால் மேற்கண்ட அரசு கடிதம் சென்னை மாநகராட்சிக்கு கிடைக்கப்பெற்ற நாளான 16.08.2011ஐ கருத்தில் கொள்ளாமல் அரசு கடிதம் வெளியிட்ட நாளான 03.12.2010ஐ கருத்தில் கொண்டு, தனது இந்த மனுவினை கனிவுடன் பரிசீலித்து தனக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் 15.05.2010 மையநாளில் வெளியிடப்பட்ட உதவி வருவாய் அலுவலருக்கான தெரிவுப்பட்டியலில் திரு.தமிழ் அவர்களுக்கு இணையான வரிசை எண்ணில் மறுநிர்ணயம் செய்து தருமாறும், அச்சமயத்திலிருந்து உதவி வருவாய் அலுவலர் (பொ) ஆக பணிபுரிந்த வந்துள்ளமையினால் அதற்குண்டான அனைத்து பணப்பயன்களும் வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

9	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0167**/2015 சி.வே.ஓ.எண்.**3604 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், பாடிக்குப்பம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–14)**	**31,00,50,422.45**	**பி. அண்ட் சி ப்ராஜக்ட்ஸ் பி. லிட்**	**35,01,80,282.32**	**(+) 12.46% அதிகம்**	**(–) 1.62% குறைவு**
10	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0171**/2015 சி.வே.ஓ.எண்.**3608 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், பாடிக்குப்பம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–18)**	**13,25,15,230.81**	**ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோட் கன்ஸ்ட்ரக்ஷன்**	**14,89,78,249.29**	**(+) 12.16% அதிகம்**	**(–) 4.09% குறைவு**
11	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0175**/2015 சி.வே.ஓ.எண்.**3612 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு	**27,04,70,327.36**	**குருமூர்த்தி இன்ஜினீயரிங் எண்ட்டர் பிரைஸஸ்**	**30,91,19,741.95**	**(+) 12.96% அதிகம்**	**(–) 3.89% குறைவு**

	பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–22)**					
12	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 **/0176**/2015 சி.வே.ஒ.எண்.**3613 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், நொளம்பூர் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–23)**	**39,18,39,734.43**	**ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ**	**45,00,19,330.10**	**(+) 14.77% அதிகம்**	**(–) 1.24% குறைவு**
13	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 **/0180**/2015 சி.வே.ஒ.எண்.**3617 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், விருகம்பாக்கம் & அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–27)**	**31,72,58,663.44**	**சக்தி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்**	**35,78,92,244.45**	**(+) 12.55% அதிகம்**	**(–) 3.91% குறைவு**
14	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 **/0181**/2015 சி.வே.ஒ.எண்.**3618 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கூவம் வடிநிலத்தில், விருகம்பாக்கம் & அரும்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–28)**	**34,78,15,042.56**	**ராக் அண்ட் ஆர்க் கன்ஸ்ட்ரக்ஷன் இந்தியா பி. லிட்**	**39,28,91,725.90**	**(+) 12.78% அதிகம்**	**(–) 4.55% குறைவு**
15	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 **/0184**/2015 சி.வே.ஒ.எண்.**3621 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–31)**	**30,99,27,983.70**	**ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ**	**35,68,96,742.70**	**(+) 15.05% அதிகம்**	**(–) 0.76% குறைவு**

16	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0185**/2015 சி.வே.ஓ.எண்.**3622 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், அடையாறு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–32)**	**29,48,42,082.77**	**ஆர். கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ**	**33,99,85,463.55**	**(+) 15.20% அதிகம்**	**(–) 0.89% குறைவு**
17	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0186**/2015 சி.வே.ஓ.எண்.**3623 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், மணப்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–33)**	**30,44,86,478.76**	**செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்ஷன்**	**34,97,20,153.30**	**(+) 13.90% அதிகம்**	**(–) 2.34% குறைவு**
18	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0187**/2015 சி.வே.ஓ.எண்.**3624 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், மணப்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–34)**	**20,64,36,499.33**	**ஸ்ரீ வெங்கடேஸ்வரா ரோட் கன்ஸ்ட்ரக்ஷன்**	**23,21,56,665.43**	**(+) 12.29% அதிகம்**	**(–) 3.32% குறைவு**
19	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0188**/2015 சி.வே.ஓ.எண்.**3625 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–35)**	**26,26,69,671.30**	**பி. அண்ட் சி ப்ராஜக்ட்ஸ் பி. லிட்**	**29,67,89,475.85**	**(+) 12.42% அதிகம்**	**(–) 3.03% குறைவு**
20	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0189**/2015 சி.வே.ஓ.எண்.**3626 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–36)**	**29,27,66,784.42**	**பி. அண்ட் சி ப்ராஜக்ட்ஸ் பி. லிட்**	**33,07,02,400.03**	**(+) 12.45% அதிகம்**	**(–) 3.38% குறைவு**

21	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0190**/2015 சி.வே.ஓ.எண்.**3627 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–37)**	**34,65,08,718.94**	**அன்னை இன்ப்ரா டெவலப்பர்ஸ் பி.லிட்**	**39,14,16,428.22**	**(+) 12.88% அதிகம்**	**(–) 3.12% குறைவு**
22	ம.நீ.வ.து.ந.க.எண்.பி4 /**0191**/2015 சி.வே.ஓ.எண்.**3628 A** சென்னைமாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அடையாறு வடிநிலம், நந்தம்பாக்கம் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி **(சிப்பம்–38)**	**40,33,36,197.41**	**அன்னை இன்ப்ரா டெவலப்பர்ஸ் பி.லிட்**	**45,56,09,364.35**	**(+) 12.81% அதிகம்**	**(–) 2.98% குறைவு**

எனவே, கலம்–2ல் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள கலம்–4ல் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு கலம்–5ல் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பத்தொகையினை ஏற்று பணியினை வழங்க ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளிச் சட்டம் 1998அ பிரிவு 7(1) மற்றும் (2)ன்படி மற்றும் சென்னை மாநகராட்சி சட்டம் 1919ன் விதி 80(2)ன்படி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.336/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 369/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2587 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் 26.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.616/2015 **பொருள் எண்.26**

மழைநீர் வடிகால்வாய் துறை–சென்னை மாநகராட்சியில் நகரத்தில் வெள்ளப் பெருக்கினை மேலாண்மை செய்ய முன்கூட்டியே முடிவுகளை எடுக்க ஏதுவான வழிமுறைகள் ஏற்படுத்த அனுமதி

காற்றழுத்தம் மற்றும் புயல் காரணமாக ஏற்படும் மழையினால் சென்னை மாநகரம் அடிக்கடி வெள்ளப்பெருக்குக்கு ஆளாகிறது. பேரழிவு தரும் வெள்ளப்பெருக்கு 1943, 1976, 1996 மற்றும் 2005ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது. அதனால் உட்கட்டமைப்புகளுக்கு பெருத்த சேதமும் உயிரிழப்புகளும் ஏற்பட்டது. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதை முன்கூட்டியே தெரிவிக்கும் முறை இல்லாததால், அந்த வெள்ளப்பெருக்கு மிகவும் கடுமையான பருவமழையின் போது ரூபாய் கோடிக்கணக்கில் இழப்பு ஏற்பட்டதையும் மற்றும் உயிரிழப்புகள் மற்றும் அரசின் உட்கட்டமைப்புகளுக்கு சேதம் ஏற்பட்டதையும் தடுக்க இயலாத நிலை இருந்தது. எனவே, மழை மற்றும் அதனால் ஏற்படும் வெள்ளம் காரணமாக அரசுக்கு ஏற்படும் இழப்புகளை குறைக்கவும் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து பொதுமக்களை காக்கவும், அதற்கென தனியே வடிவமைக்கப்பட்ட ஒரு வெள்ள முன்னெச்சரிக்கை முறை சென்னை மாநகரத்திற்கு அவசியமாகும்.

சென்னை மாநகரத்தில் 2005ல் ஏற்பட்ட வரலாறு காணாத மழை வெள்ளத்திற்கு பிறகு 36 இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் இடமாக இனம்காணப்பட்டது. அதன் பிறகு பொதுப்பணித்துறை மற்றும் மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் மூலம் இந்திய நார்வே நாடுகளின் இரு நாடுகளுக்கான ஒத்துழைப்புடன், அண்ணா பல்கலைக்கழகத்தின் ரிமோட் சென்ஸிங் நிறுவனம் ஏர்போர்ன் லேசர் டெரைன் மேப்பிங்(Airborne Laser Terrain Mapping) முறையினை பயன்படுத்தி மழைநீர் பாதிப்பு வரைபடம் ஒன்றினை சென்னை மாநகருக்கு சென்னை பெருநகரின் 500 சதுர கிலோ மீட்டர் தூரத்தை உள்ளடங்குமாறு தயாரித்தது. சென்னை மாநகருக்கு மற்றும் அதன் புறநகர் பகுதிகளுக்கு வடிவமைக்கப்பட்ட இந்த மழைநீர் பாதிப்பு வரைபடத்தின்படி 756 இடங்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டு பாதிக்கப்படும் பகுதிகளாக இனங்காணப்பட்டன.

திட்ட உருவாக்க மானிய நிதியின் மேலாளரான தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம்(Tamil Nadu Urban Infrastructure and Financial Services Limited) அண்ணா பல்கலைக்கழகத்தின் ரிமோட் சென்ஸிங் நிறுவனத்தினை, தமிழக அரசின் தமிழ்நாடு நீடித்த நிலையான நகர வளர்ச்சி திட்டத்தின் கீழ், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கான மழைநீர் வடிகால்வாய் திட்டங்களுக்காக நியமனம் செய்தது. உலக வங்கி, இந்த திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் சென்னை மாநகராட்சியில் நகர வெள்ள மேலாண்மை திட்டத்தை அனைத்து வடிநிலங்களுக்கும் ஏற்படுத்த பரிந்துரைத்தனர். இந்த முறையினை வடிவமைப்பரை நியமனம் செய்ய ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை, தேவையான உபகரணங்களை வழங்கவும் மற்றும் பொருத்தவும் முன்னெச்சரிக்கை முடிவு ஆதார முறை தொடர்பாக அண்ணா பல்கலைக்கழகம் தயாரிக்கும். இந்த திட்டத்தை செயலாக்குபவர் திட்ட உருவாக்க மானிய நிதியிலிருந்து(Project Development Grant Fund) சென்னை மாநகராட்சியினால், உபகரணங்களை பொருத்தவும், உபகரணங்களிலிருந்து ரியல் டைம் டேட்டா ஆகியவைகளிலிருந்து விவரங்களை நாளது தேதிக்கு சரிசெய்யவும்,

(தானியங்கி தட்ப வெப்ப நிலை நிலையம் மற்றும் தானியங்கி நீர் மட்ட பதிவு கருவிகள்(Automatic Weather Station & Automatic Water Level Recorders) மேம்படுத்தப்பட்ட நிலை தகவல்களை பெறவும், இந்த முறையினை 3 ஆண்டுகளுக்கு ரிப்பன் மாளிகை வளாகத்தில் செயலாக்கவும், மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆலோசனையின்படி சென்னை மாநகராட்சி உதவி செய்ய நியமனம் செய்யப்படுவார். இந்த திட்டத்தின் கீழ் முன்னெச்சரிக்கை முடிவுகள் ஆதரவு முறை (Early Warning Decision Support System) அனைத்து செலவினமும் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் இந்த திட்டத்தை வழங்குபவர் ஆகியவர்களுக்கு தமிழ்நாடு நீடித்த நிலையான நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் உலக வங்கியினால் தொழில்நுட்ப உதவி கூறின் கீழ் திட்ட உருவாக்க மானிய நிதியிலிருந்து வழங்கப்படும்.

எனவே,

(அ) சென்னை மாநகராட்சி, ஆலோசகர்களாக செயல்படவுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின், ரிமோட் சென்ஸிங் நிறுவனம் மற்றும் திட்ட உருவாக்க மானியம் நிதி ஆகியவர்களுக்குள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நிறைவேற்றவும்,

(ஆ) ரிப்பன் மாளிகை வளாகத்தில் ஒரு முன்னெச்சரிக்கை முடிவுகள் ஆதரவு முறையினை (Early Warning Decision Support System) சென்னை மாநகருக்கு நகர வெள்ள மேலாண்மை முறையினை செயல்படுத்த நிறுவவும்,

(இ) இந்த திட்டத்தை செயல்படுத்த திட்ட வடிவமைப்பாளரை திட்ட உருவாக்க மானியம் நிதியிலிருந்து நியமனம் செய்யவும்,

மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.337/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.370/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2182/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 30.09.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.617/2015 **பொருள் எண்.27**

ஒப்பம் – மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் – கால்வாய் மேம்படுத்தும் பணிகள் தொகுப்பு – கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணி – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி

கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ.56,92,23,059.64பைக்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு 28.06.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 27.08.2012க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் சில எதிர் பாராத காரணங்களுக்காக இரு முறை ஆறு மாத காலம் முறையாக ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. அதாவது 27.08.2013க்குள் முடிக்கப்பட வேண்டும். மேலும் 2012ஆம் ஆண்டின் பருவ மழை காரணமாகவும் இப்பகுதி தாழ்வான பகுதி என்பதால் மழைக்காலங்களில் மழைநீர் கால்வாய் பள்ளங்களில் ஊற்று தண்ணீர் மற்றும் கழிவு நீர் தேங்குவதாலும் 31.03.2015 வரை பெறப்பட்டது.

மன்றத் தீர்மான எண்.278/2015, நாள்.6.7.2015ல் பணி மேற்கொள்ளும் இடத்தில் வியாசர்பாடி கால்வாய் பகுதியில் இருபுறங்ளிலும் குடியிருப்பு பகுதிகள் இருப்பதினாலும், வழி தடம் ஏதும் இல்லாததாலும், இப்பணி நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் பெய்த மழையினால் பணி மேற்கொள்வதில் இடர்பாடு ஏற்பட்டதாலும் இப்பணி துரிதமாக 31.03.2015க்குள் முடிக்க இயலாத நிலையாக இருப்பதாலும், மேலும் வியாசர்பாடி கால்வாயில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கொடுங்கையூர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்காக தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் ஒக்கியம் துரைபாக்கத்தில் அடுக்குமாடி வீடுகள் ஒதுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கொடுங்கையூர் கால்வாயில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றி மறு குடி அமர்த்தப்பட்டவுடன் காலதாமதமின்றி உடன் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளதால் இவ்ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படுவதன் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பகுதியில் உடனே பணி மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தாரருக்கு 31.06.2015 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

27.06.2015 நாளிட்ட ஒப்பந்ததாரர் கடிதத்தின்படி, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில், வியாசர்பாடி கால்வாய் மேம்படுத்தும் பணி 1470மீ பகுதியில் 1320மீ முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள 150மீ பகுதியில் பகல் நேரங்களில் கனரக வாகனங்கள் கட்டிட தளவட பொருட்களை பணியிடத்தில் கொண்டு செல்ல இயலாத நிலை ஏற்படுகிறது என்பதாலும் பணியிடத்தின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் குழாய்களின் மூலம் கழிவுநீர் தொடர்ச்சியாக வருவதினாலும், இப்பணிகள் முடிக்க காலதாமதம் ஏற்படுகிறது என தெரிவித்துள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியில் திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்கள் பணி மேற்கொள்ளும் இடத்தில் கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய், ஜவஹர் கால்வாய் பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. மேலும், வியாசர்பாடி கால்வாய் பணியிடத்தில் 1470மீ நீளத்தில் 1320மீ நீளத்திற்கு பணிகள் முடிக்கப்பட்டது. மேலும் இப்பணியிடத்தில் இரவு நேரங்களில் மட்டுமே கனரக வாகனங்கள் மூலம் கட்டிட தளவட பொருட்கள் கொண்டு பணி மேற்கொள்ள முடிகிறது. மேலும் இக்கால்வாயின் குறுக்கே அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர்குழாய்கள் சேதமடைந்து கழிவுநீர் தொடர்ச்சியாக வருவதினாலும் இப்பணிகள் முடிக்க காலதாமதம் ஏற்படுவதினால் 31.06.2015க்குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்படுகிறது. எனவே, இப்பணிக்கு 31.10.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், இப்பணிக்கான பணி ஆணை 2008–2009 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி வழங்கப்பட்டதின் மூலம் தற்சமயம் மேற்கொள்ளும் பணிகளுக்கான பணப்பட்டுவாடா ஒப்ப விதிகளின்படி விலை விகிதச்சார உயர்வு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தற்போது சிமெண்ட், கம்பி மற்றும் கட்டிட தளவாட பொருட்களின் விலை வெகுவாக உயர்ந்துள்ளதாலும், இப்பணிக்கு புதிய ஒப்பம் கோரும் பட்சத்தில் இப்பணிக்கு தற்போது ஏற்படும் செலவினத்தை காட்டிலும் கூடுதல் செலவினம் ஏற்படும் என்பதினால் இவ்ஒப்பந்ததாரரின் மூலம் இப்பணிகளை முடிக்க வேலை விகிதாச்சார உயர்வு இல்லாமல் (without Escalation charges) 31.10.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் கால்வாய் மற்றும் வியாசர்பாடி கால்வாய் பணிகளை 31.10.2015க்குள் முடிக்க ஏற்படும் தோராய மதிப்பீடு மற்றும் இப்பணி மேற்கொள்ள விலை விகிதாச்சாரம் வழங்குவதால் ஏற்படும் விலை உயர்வின் ஏற்றத்தின் ஒப்புகை படிவம் 1ன் மூலம் கணக்கிடப்பட்டு சமர்ப்பிக்கப்படுகிறது.

(1) இதன்படி மேற்கண்ட மீதமுள்ள பணி முடிக்க 01.07.201531.10.2015 ஏற்படும் தோராய செலவீனம் – ரூ. 1.28,33,055.30

(2) 01.07.2015 முதல் 31.10.2015 வரை மேற்கொள்ளப்படும் பணிக்கு வழங்கப்படும் விலை விகிதாச்சாரம் உயர்வு – ரூ. 1,59,85,366.10 (+)22.34 அதிகம்

(3) மேலும், இப்பணி 2014–2015 விலை விகிதாச்சாரப்படி மேற்கொண்டால் ஏற்படும் செலவீனம் – ரூ. 2,32,01,657.36 (+) 80.80 அதிகம்

எனவே, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளை முழுவதுமாக முடிக்க விலை விகிதாச்சார உயர்வுடன் (Escalation Charges) 01.07.2015 முதல் 31.10.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதி பரிந்துரைக்கப்பட்டது.

எனவே, இப்பணியினை மேற்கொள்வதன் மூலம் சென்னை மாநகராட்சிக்கு இழப்பு ஏதும் இல்லை என சமர்ப்பிக்கப்படுகிறது.

இப்பணிகள் முழுவதும் October மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் இப்பணிகள் அனைத்தும் முழுவதுமாக முடிப்பதின் மூலம் இப்பகுதியில் கொசு மற்றம் மாசு அகற்றப்பட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்படும் என குறிப்பிடப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு 31.10.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.07.2015 முதல் 31.10.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

(1) திருவாளர்கள் ஸ்ரீ சரவணா இன்ஜீனியரிங் பவானி பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் கீழ், கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிகள் முழுவதுமாக முடிப்பதற்கு 30.06.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.07.2015 முதல் 31.10.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) மேலே சமர்ப்பிக்கப்பட்ட காரணங்களின் அடிப்படையில் கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு விலை விகிதாச்சார உயர்வு இல்லாமல் (Without Escalation Charges) வழங்குவதற்கும்,

(3) மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.07.2015 தேதியில் நிர்ணயம் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.338/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

> "ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.368/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண்.பி3 (பி1)/3785/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.618/2015 **பொருள் எண்.28**

மண்டலம் - 15 – வைப்பு நிதி பணி – 2015–16 சாலை வெட்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்.நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, மண்டலம் 15ல் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் வார்டு 198ல் 219 சாலைகளில் சாலை வெட்டு மேற்கொள்ள சாலை வெட்டு கட்டணமாக ரூ.11,52,78,200/– வசூலிக்கப்பட்டுள்ள வைப்புநிதியிலிருந்து 28 சாலைகளில் உள்ள சாலை வெட்டுகளை சீரமைக்க ரூ.159.40 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ரூ.134.40 இலட்சம் செலவில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது மேலும் ரூ.9.17 மதிப்பீட்டில் மூன்று சாலைகளில் உள்ள சாலை வெட்டுகளை சீரமைக்க ஒப்பம் கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 188 சாலைகளில் தற்போது சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட 55 சாலைகளில் ரூ.298.72 இலட்சம் மதிப்பீட்டில் சாலை வெட்டு சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு 23.09.2015ல் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) முலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1093, நாள்.18.09.2015 மற்றும் நமது எம்.ஜி.ஆர் நாளிதழில் 18.09.2015 அன்று வெளியிடப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

ஒப்ப நாளான 23.09.2015 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

1) திருவாளர்.நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ்
2) திருவாளர்.ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் திருவாளர்.நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் மற்றும் திருவாளர். ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் இருவரும் தகுதி வாய்ந்த ஒப்பந்தரர்களாக அறிவிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் 05.10.2015 அன்று திறக்கப்பட்டது.

வ. எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2014–2015ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ்	ரூ.2,56,29,390.05/–	ரூ.2,81,89,766/–	(+)9.99%
2	திருவாளர்.ஸ்ரீ கற்பகம் கன்ஸ்ட்ரக்ஷன்	ரூ.2,56,29,390.05/–	ரூ.3,10,11,562/–	(+)21.00%

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர். நியூபாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்களிடம் 07.10.2015 அன்று விலைக்குறைப்பு கோரப்பட்டதற்கு திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்கள் 23.10.2015 நாளிட்ட கடிதத்தில் ரூ.2,75,51,594.31/– க்கு (+)7.50% சதவிகிததிற்கு அதிகமாக பணி செய்ய இசைவு தெரிவித்தார். எனவே திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்களது ஒப்பந்தத்தொகையான ரூ.2,75,51,594.31/– ஆனது 2014–15ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகம். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.95% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 15 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,75,51,594.31/–ஆகும். குறைந்த பணிக்காலமான 4 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.95% குறைவாகும். மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்ப கூர்ந்தாய்வுக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதால் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.2,75,51,594.31/– ஆகும். குறைந்த பணிக்காலமான 4 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும்
வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகமாகும். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.95% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர். நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.2,75,51,594.31/– 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% அதிகம் மற்றும் சந்தை விலையை விட (–)12.95% குறைவாக உள்ளது. ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு மேற்படி பணியை குறைந்த ஒப்பத்ததாரரான திருவாளர்.நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ் & எண்டர்பிரைசஸ்அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.2,75,51,594.31/– க்கு பணியினை வழங்க சுற்றின் மூலம் ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுமம் அன்று பரிந்துரை செய்கிறது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்.நியூ பாரத் எலக்ட்ரிகல்ஸ்& எண்டர்பிரைசஸ் அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.50% அதிகமான ஒப்பத்தொகை ரூ.2,75,51,594.31/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில்இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.332/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.
>
> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 364/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

பே.சா.து.ந.க.எண்.பி3 (பி1)/3870/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.619/2015 **பொருள் எண்.29**

மண்டலம் - 15 – வைப்பு நிதி பணி – 2015–16 சாலை வெட்டு சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல் – குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.கண்ணன் அவர்களுக்கு பணியினை அளிக்க அனுமதி

சென்னை மாநகராட்சி, மண்டலம் 15ல் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் வார்டு 197ல் 252 சாலைகளில் சாலை வெட்டு மேற்கொள்ள சாலை வெட்டு கட்டணமாக ரூ.11,02,59,300/– வசூலிக்கப்பட்டுள்ள வைப்புநிதியிலிருந்து 34 சாலைகளில் உள்ள சாலை வெட்டுகளை ரூ.159.93 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.113.89 இலட்சம் மதிப்பீட்டில் 25 சாலைகளில் உள்ள சாலை வெட்டுகளை சீரமைக்க ஒப்பம் கோரப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள 199 சாலைகளில் தற்போது சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட மற்றும் ஒப்படைக்கப்படவுள்ள 33 சாலைகளில் ரூ.130.37 இலட்சம் மதிப்பீட்டில் சாலை வெட்டு சீரமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு 09.10.2015ல் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) மூலமாக ஒப்பம் கோரப்பட்டது. இதற்கான அறிவிப்பு சென்னை மாநகராட்சி ஒப்பந்த செய்தி மலர் 21, இதழ் 1095, நாள்.01.10.2015 மற்றும் நமது எம்.ஜி.ஆர் நாளிதழில் 01.10.2015 அன்று வெளியிடப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது.

ஒப்ப நாளான 09.10.2015 அன்று ஒப்பத்தில் கலந்துகொண்ட கீழ்கண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் தொழில்நுட்ப ஆவணம் திறக்கப்பட்டது.

01) திரு.ஆர்.கண்ணன்

02) திருவாளர்.முரளி பவுண்டேசன்

தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் மேற்படி ஒப்பத்தில் கலந்துகொண்ட ஒப்பந்ததாரர்கள் **திரு.ஆர்.கண்ணன்** மற்றும் திருவாளர்.முரளி பவுண்டேசன்அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களை மதிப்பீடு செய்ததில் திருவாளர்.முரளி பவுண்டேசன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்கள் இவ்வொப்பத்திற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் இல்லாததால் அவர்களது ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. **திரு.ஆர்.கண்ணன்** அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரராக அறிவிக்கப்பட்டார். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் மேற்பார்வை பொறியாளர் (பே.சா.து) அலுவலகத்தில் 26.10.2015 அன்று திறக்கப்பட்டது.

வ. எண்.	ஒப்பந்ததாரர்கள் பெயர்	அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2014–2015ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ.	ஒப்பத்தொகை ரூ.	ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு
1	திரு.ஆர்.கண்ணன்	ரூ.1,12,48,117.26/–	ரூ.1,23,72,928.99/–	(+)10.00%

மேற்படி ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரர் திரு.ஆர்.கண்ணன் அவர்களிடம் 26.10.2015 அன்று விலைக்குறைப்பு கோரப்பட்டதற்கு திரு.ஆர்.கண்ணன் அவர்கள் 26.10.2015 நாளிட்ட கடிதத்தில் ரூ.1,20,91,726.05/–க்கு (+)7.50% சதவிகிதத்திற்கு அதிகமாக பணி செய்ய இசைவு தெரிவித்தார். எனவே திரு.ஆர்.கண்ணன் அவர்களது ஒப்பந்தத்தொகையான ரூ.1,20,91,726.05/–ஆனது 2014–15ம் ஆண்டு அலுவலக விலை விவர மதிப்பீடு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகம். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.68% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 15 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.கண்ணன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,20,91,726.05/–ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.68% குறைவாகும். மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்ப கூர்ந்தாய்வுக் குழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது.

3) சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத்துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளதால் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

4) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.கண்ணன் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.1,20,91,726.05/–ஆகும். குறைந்த பணிக்காலமான 3 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

5) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% விழுக்காடு அதிகமாகும். இதனை சந்தை விலையோடு ஒப்பிடுகையில் (–)12.68% விழுக்காடு குறைவாகும்.

மேலும், இவ்வொப்பமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு.ஆர்.கண்ணன் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.1,20,91,726.05/– 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)7.50% அதிகம் மற்றும் சந்தை விலையை விட (–)12.68% குறைவாக உள்ளது. ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு மேற்படி பணியை குறைந்த ஒப்பத்ததாரரான திரு.ஆர்.கண்ணன் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.1,20,91,726.05/–க்கு பணியினை வழங்க சுற்றின் மூலம் ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுமம் அன்று பரிந்துரை செய்கிறது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.ஆர்.கண்ணன் அவர்களுக்கு 2014–15ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)7.50% அதிகமான ஒப்பத்தொகை ரூ.1,20,91,726.05/–க்கு பணியினை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.333/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.365/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.க.கு.ந.க.எண்.அ8/1846/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.620/2015 **பொருள் எண்.30**

படிகள் – அகவிலைப்படி – 01.07.2015 முதல் உயர்த்தி அளிக்கப்பட்டுள்ள 6 சதவிகித அகவிலைப்படி அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி

அரசாணை எண். 262 நிதி (படிகள்)த் துறை நாள்:16.10.2015 ஜூலை 2015 முதல் அகவிலைப்படி 113 விழுக்காடிலிருந்து 119 விழுக்காடு உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.07.2015 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும், ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2015 வரை அகவிலைப் படி நிலுவைத் தொகை வழங்கவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்கு குறைவாக வரக்கூடியத் தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இவ்வரசாணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர அலுவலர்களுக்கும், சில்லரை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும் எனவும், பகுதி நேர அலுவலர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை, அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் மானியம் பெறும் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், சிறப்புப்பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையில் பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் / எழுத்தர்கள் ஆகியோருக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படி உயர்வினால் சென்னை மாநகராட்சிக்கு மாதம் ஒன்றுக்கு ஆகும் கூடுதல் செலவு ரூ. 1.28 கோடியாகும் எனவும், நடப்பு நிதியாண்டில் ரூ.7.70 கோடி கூடுதல் செலவு ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, அரசாணை எண். 262 நிதி (படிகள்) துறை நாள்.16.10.2015ல் அகவிலைப்படி 113 விழுக்காடிலிருந்து 119 விழுக்காடு உயர்த்தி வழங்கிட வெளியிடப்பட்டுள்ள அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண். 371/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

****

ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2184/2009

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் 26.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.621/2015 **பொருள் எண்.31**

ஒப்பம்: மழைநீர் வடிகால் துறை – ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி – மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி

மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்காக ரூ. 100,60,77,292/–க்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு 05.05.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. இப்பணியின் காலம் 26 மாதங்கள் ஆகும். அதாவது 04.07.2012க்குள் முடிக்கப்பட வேண்டும்.

மேலும், மழைக்காலங்கள் மற்றும் சட்டமன்ற தேர்தல் மற்றும் சில எதிர்பாராத காரணங்களுக்காகவும், மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்ச்சியாக வருவதினாலும், சேவைத்துறையினரின் பணிகளாலும், போக்குவரத்து காவல் துறையினரின் அனுமதி மற்றும சில இடர்பாடுகளாலும் மூன்று முறை பணி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது.

தீர்மானம் மூலம், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் பகுதிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறுகுடியமைப்பு செய்வதினால் இப்பணி காலதாமதம் ஏற்பட்டதினால் 30.06.2015க்குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க ஐந்தாம் முறையாக 01.03.2015 முதல் 30.06.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கண்டுள்ள ஒப்பந்ததாரர் கடிதத்தில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் பணியிடத்தில் ஆக்கிரமிப்புகள் அகற்றும் பணி முடிக்கப்பட்டு மறுகுடியமர்வு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், மாம்பலம் மற்றும் நந்தனம் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணியில் மீதம் உள்ள பணிகளை விரைந்து முடிக்க கால நீட்டிப்பு வழங்க வேண்டியுள்ளனர்.

இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாயில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிகளுக்கு மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணியிடத்தில் கால்வாய் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் மறுகுடியமைப்பு செய்து வருகின்றனர். இப்பணி முழுவதும் முடிவடைந்ததும் அப்பகுதியில் உடனே பணி மேற்கொண்டு முழுவதும் முடிக்கப்படும். எனவே, 30.06.2015குள் பணிகள் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிகளுக்கு முழுவதுமாக முடிக்க 01.07.2015 முதல் 30.09.2015 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

இதனால் இப்பணிக்கு 30.06.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.07.2015 முதல் 30.09.2015 வரை இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

(1) திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு ஒப்பந்த துணை விதி 7 – F. ஒப்பந்த சிறப்பு விதிகளின் மாம்பலம் மற்றும் நந்தனம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு முழுவதுமாக முடிப்பதற்கு 30.06.2015 வரை இறுதியான கால நீட்டிப்பு வழங்கியதற்கு விலக்களித்து 01.07.2015 முதல் 30.09.2015 வரை பணி கால நீட்டிப்புற்கு அனுமதியும் இறுதியாக பணி நீட்டிப்பு வழங்கவும்,

(2) மாம்பலம் மற்றும் நந்தனம் பகுதியில் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு வேலை விகிதாச்சார உயர்வு இல்லாமல் (without Escalation charges) 01.07.2015 முதல் வழங்குவதற்கும்,

(3) மேற்கண்ட பணிக்கு ஒப்ப விதிகளின் அடிப்படையில் திருத்திய மைல் கல் (Milestone) 01.07.2015 தேதியில் நிர்ணயம் செய்யவும்.

மேற்கண்ட (1) முதல் (3) வரையிலான இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.340/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"ஏற்கனவே நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.372/2015ன்படி நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

தி.க.மே.து.ந.க.எண்.அ7/2639/2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 27.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.622/2015 **பொருள் எண்.32**

திடக்கழிவு மேலாண்மை துறை – ஒப்பந்தம் – மண்டலம்–7 வார்டு–79 முதல் 93 வரையுள்ள பகுதியிலிருந்து குப்பைகளை அள்ளி சென்று அத்திப்பட்டு குப்பைகொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகின்ற குப்பைகளை டிப்பர் லாரிகள் மூலம், கொடுங்கையூர் குப்பைகொட்டும் வளாகத்திற்கு எடுத்து செல்லும் பணிக்கான ஒப்பம் 2014–15ஆண்டு திரு.டி.பூபாலன் அவர்களுக்கு வழங்கப்பட்டது – ஒப்ப பணி முடிவடைந்தது – மேலும் பணியினை தொடர்ந்து செய்யவும் கூடுதல் செலவீனங்களுக்கு அனுமதி

மண்டலம்–7, வார்டு–79 முதல் 93 வரை 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு தினமும் சுமார் 335 மெ.டன் அளவு குப்பை சேகரிக்கப்பட்டு லாரிகள் மூலம் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் தினமும் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இங்கு சேகரிக்கப்படும் குப்பைகளை தினமும் பெரிய கொள்ளளவு லாரிகளை கொண்டு தனியார் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே இதனை கருத்தில் கொண்டு அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொண்டு சென்று கொட்டும் பணிக்கு நாளொன்றிற்கு 335 மெட்ரிக் டன் வீதம் 365 நாட்களுக்கு 1,22,275 மெட்ரிக் டன் குப்பைகளுக்கு மதிப்பீட்டு தொகை ரூ. 3,28,91,975/–க்கு தயாரிக்கப்பட்டு 30.09.2014 அன்று மாமன்றத்தில் மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. திரு.டி. பூபாலன் ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்படி பணியானது 05.10.2014 முதல் தொடங்கப்பட்டது. மேலும், இப்பணியின் ஒப்ப காலம் 30.09.2015 உடன் முடிவடைகிறது. இவ்வொப்பந்ததாரருக்கு 05.10.2014 முதல் 21.08.2015 வரை எடுக்கப்பட்ட 1,21,190.415 மெட்ரிக் டன்கள் குப்பைகளுக்காக ரூ. 3,17,51,887/– பட்டி தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பணியின் ஒப்பந்தத்தின்படி 05.10.2014 முதல் 21.08.2015 வரையிலான 321 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 335 மெட்ரிக் டன்கள் வீதம் 1,07,535 மெட்ரிக் டன்கள் குப்பை எடுக்கப்பட வேண்டும். இதனிடையே இந்த குப்பை கொட்டும் வளாகத்தை சுற்றிலும் சுற்று சுவர் கட்டும் பணி துவக்கப்பட்டது. இந்த சுற்று சவர் கட்டும் பகுதியில் பல ஆண்டுகளாக தேங்கியிருந்த சுமார் 20 அடி ஆழம் கொண்ட அதிக அளவு குப்பைகளை அகற்றினால் மட்டுமே சுற்று சுவர் கட்ட இயலும் என்ற நிலையில், தினசரி எடுக்கப்படும் புதிய குப்பைகளான 335 மெட்ரிக் டன்களுடன் சேர்த்து சுற்றுசுவர் கட்டப்பட வேண்டிய பகுதியில் இருந்த பழைய குப்பைகளையும் சேர்த்து எடுக்கப்பட்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒப்பந்தத்தில் உள்ள மொத்த அளவு குப்பைகளும் எடுக்கப்பட்டுவிட்டது.

இந்நிலையில் தினசரி சேகரிக்கப்படும் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு எடுத்து சென்று கொட்டும் பணியானது தொடர்ந்து செய்யப்பட வேண்டிய அவசிய பணியாக உள்ளதால் மீண்டும் இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள மன்ற தீர்மான எண்.294/2015, நாள்.06.07.2015ன்படி, ரூ. 3,28,91,975/–க்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு 25.08.2015 அன்று ஒப்பம் கோரப்பட்டுள்ளது. இந்த ஒப்பம் தீர்வு செய்யும் நிலையில் உள்ளது. மேலும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பம் தீர்வு செய்ய காலம் தேவைப்படுகிறது. எனவே இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்ள ஏற்கனவே உள்ள ஒப்பத்தொகையில் 25% சதவீதத்திற்கு மிகாமல் பணியினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

எனவே இதனை கருத்தில் கொண்டு தொடர்ந்து பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதியும், பொது மக்கள் நலன் கருதியும் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு டிப்பர் லாரிகள் மூலம் குப்பைகளை கொண்டு சென்று கொட்டுவதற்கு அதே ஒப்பந்ததாரரை கொண்டு, பழைய குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலையிலேயே நாள் ஒன்றுக்கு ரூ. 262/– வீதம் அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பைகளை எடுத்து சென்று கொட்டுவதற்கு கூடுதலாக ஒப்ப தொகையில் 25 சதவீதத்திற்கு மிகாமல் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள திரு.டி.பூபாலன் ஒப்பந்ததாரருக்கு அனுமதி வழங்கவும் மற்றும் ஆணை வேண்டியும் சமர்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பொருள்	அளவு	ஒப்ப விலை	மொத்த தொகை
1	ஒப்பந்தத்தில் உள்ள அளவு	122275 மெ.டன்	ரூ. 262/– (ஒரு டன்)	ரூ. 3,20,36,050/–
2	25 சதவீதம்	30568 மெ.டன்	ரூ. 262/– (ஒரு டன்)	ரூ. 80,08,816/–

மேலும், மத்திய வட்டாரத்திலிருந்து பெறப்பட்ட குறிப்பில், மண்டல அலுவலர், மேற்பார்வை பொறியாளர் மற்றும் வட்டார துணை ஆணையர் அவர்களின் ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

எனவே,

1) 22.08.2015 முதல் மண்டலம் – 7 அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்து டிப்பர் லாரிகள் மூலம் 25 சதவீதத்திற்கு மிகாமல் குப்பை (அதாவது 30568 மெ.டன்) எடுத்து செல்ல திரு.டி.பூபாலன் ஒப்பந்ததாரருக்கு அவசரம் மற்றும் அவசியம் கருதி பணி ஆணை வழங்கவும்,
2) பணம் பட்டுவாடா செய்வதற்கான செலவை Function Head Code: 40-41-03, Code No. 230-15-01-00 என்ற தலைப்பின்கீழ் அனுமதிக்கவும்,

மேற்காணும் 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டம் 16.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.341/2015ன்படி நிலைக்குழு (பணிகள்) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் கூட்டம் 19.10.2015 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 27.10.2015 அன்று தீர்மான எண்.373/2015ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)) சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

****

பே.சா.து.ந.க.எண். பி1/4186 /2015

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.10.2015 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.623/2015 **பொருள் எண்.33**

பேருந்து சாலைகள் துறை – தமிழ்நாடு நகர்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்ட நிதி 2015–16 (TURIF) – 92 பேருந்து சாலைகளில் அகழ்ந்தெடுத்து டி.பி.எம். மூலம் வலுப்படுத்தி பிளாஸ்டிக் கழிவுகளை உபயோகப்படுத்தி சி.பி.சி.40 மி.மீ. கனத்தில் பேவர் இயந்திரத்தின் மூலம் சாலை அமைக்கும் பணி மற்றும் போக்குவரத்து அபிவிருத்தி பணிகள் – 9 சிப்பங்களாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சி 387.38 கி.மீ. நீளமுடைய 471 பேருந்து தட சாலைகளை பராமரித்து வருகிறது. இயற்கை சீற்றங்களினாலும், சேவைத்துறையினரின் பணிகளாலும் பேருந்து தட சாலைகள் மிக மோசமான நிலையை அடைந்தன. போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், ஆங்காங்கே உள்ள பள்ளங்களினால் ஏற்படும் சாலை விபத்துகளை கட்டுப்படுத்தும் வகையிலும் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காகவும், நலனுக்காவும் இவ்வித சாலைகளை உடனடியாக சீர் செய்ய வேண்டியது அவசியமாகிறது.

முதல் கட்டமாக 194 பேருந்து தட சாலைகள் மேம்படுத்தப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக, பேருந்து சாலைகள் துறையின் மூலம் 92 சாலைகளில் 72.65 கி. மீ. நீளத்திற்கு ரூ.161.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு நிதி (TURIF) மூலம் ரூ.80.00 கோடியும் மீதமுள்ள தொகை ரூ.81.70 கோடி செலவீனத்தை சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலமும் சாலைகள் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. 2014–15 ஆம் ஆண்டு அலுவலக விலை பட்டியல்களின் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசாணை பெறப்பட்டது. இதன்படி, 9 சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோரப்பட்டு பார்வை 2ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. 9 சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 01.10.2015 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழ் இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி தமிழ் நாளிதழ் ஆகியவற்றிலும், 02.10.2015 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e - tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 16.10.2015 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பம் திறக்கப்பட்டன. தொழில்நுட்ப ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்ட ஒப்பங்கள், துணை ஆணையர் (பணிகள்) தலைமையில் நடைபெற்ற தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 20.10.2015 அன்று திறக்கப்பட்டது. ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

அட்டவணை – I

வ. எண்	சிப்பம் எண்	ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள்	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்)	ஒப்பந்ததரர்கள் அளித்த விலை விகிதம் 2014–15 ஆண்டு அலுவலக விலைப் பட்டியல் படி
1	சிப்பம்–1	கே.சி.பி. இன்ஜினியர்ஸ் (பி) லிட்	33,88,42,001.00	12.00%
		டி.தமிழ்ராஜன்	34,90,05,440.00	15.36%
2	சிப்பம்–2	கே.சி.பி. இன்ஜினியர்ஸ் (பி) லிட்	27,56,61,322.75	15.09%
		அன்னை இன்ஃப்ரா டெவலபர்ஸ் (பி) லிட்	26,36,69,888.50	10.08%
3	சிப்பம்–3	குருமூர்த்தி இன்ஜினியர்ஸ் எண்டர்பிரைசஸ்	18,56,09,075.00	7.22%
		ஜி.ஜி. இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர்ஸ்	19,43,83,373.00	12.29%
4	சிப்பம்–4	ஆர்.வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	15,78,15,174.00	11.69%
		கே.சி.பி. இன்ஜினியர்ஸ் (பி) லிட்	16,58,18,665.00	17.35%

5	சிப்பம்–5	டி.எம்.சுப்ரமணியம் & கோ	15,66,15,030.65	10.00%
		டி.குமார்	16,39,02,256.00	15.12%
6	சிப்பம்–6	டி.தமிழ்ராஜன்	15,44,29,025.59	8.94%
		கே.சி.பி. இன்ஜினியர்ஸ் (பி) லிட்	16,14,55,377.48	13.90%
7	சிப்பம்–7	ஆர்.இராமராவ்	15,90,51,849.00	11.19%
		எஸ்.பி.எல். இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் (பி) லிமிடெட்	15,45,51,400.20	8.04%
8	சிப்பம்–8	ஆர்.இராமராவ்	16,30,21,514.70	10.56%
		எஸ்.பி.எல். இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் (பி) லிமிடெட்	16,45,73,082.70	11.61%
9	சிப்பம்–9	டி.குமார்	16,47,41,209.88	11.00%
		டி.எம்.சுப்ரமணியம் & கோ	17,80,90,487.80	19.99%

குறைந்த விலைவிகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2014–15ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட அதிகம். மேலும் 17.10.2015 நாளிட்ட சந்தை விலையுடன் ஒப்பிடுகையிலும் அதிகமாகவே இருந்தது.

இதனை விலை குறைப்பு செய்ய, ஒப்பந்ததாரர்களிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் விலை குறைப்பு செய்ய ஒப்புக்கொண்டார்கள். விலை குறைப்பு செய்த ஒப்பங்களின் விவரம் பின்வருமாறு:

அட்டவணை – II

வ. எண்	சிப்பம் எண்	ஒப்பந்ததாரர்கள் பெயர் திரு/ திருவாளர்கள்	பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர்களுக்கு முடிவு செய்யப்பட்ட தொகை ரூ.	பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததரர்களுக்கு முடிவு செய்யப்பட்ட விலை விகிதம் 2014–15 அலுவலக விலைப் பட்டியல் படி	17.10.2015 சந்தைவிலை யுடன் ஒப்பிடுகையில் ஒப்ப சதவீகிதம்
1	சிப்பம்–1	கே.சி.பி. இன்ஜினியர்ஸ் (பி) லிட்	28,59,82,648.00	(–)5.47%	(–)0.14%
2	சிப்பம்–2	அன்னை இன்ஃப்ரா டெவலபர்ஸ் (பி) லிட்	23,01,83,812.00	(–)3.90%	(–)0.22%
3	சிப்பம்–3	குருமூர்த்தி இன்ஜினியர்ஸ் எண்டர்பிரைசஸ்	16,42,64,031.00	(–)5.11%	(–)0.25%
4	சிப்பம்–4	ஆர்.வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்	13,49,30,266.00	(–)4.51%	(–)0.14%
5	சிப்பம்–5	டி.எம்.சுப்ரமணியம் & கோ	13,56,28,616.00	(–)4.74%	(–)0.19%
6	சிப்பம்–6	டி.தமிழ்ராஜன்	13,34,26,678.00	(–)5.88%	(–)0.20%
7	சிப்பம்–7	ஆர்.இராமராவ்	13,77,53,179.00	(–)6.58%	(–)0.29%
8	சிப்பம்–8	எஸ்.பி.எல். இன்ஃப்ராஸ்ட்ரக்சர்ஸ் (பி) லிமிடெட்	13,60,05,232.00	(–)4.92%	(–)0.26%
9	சிப்பம்–9	டி.குமார்	14,11,83,216.00	(–)4.87%	(–)0.21%

அட்டவணை II–ன் படி ஒப்பந்ததாரர்கள் அளித்த ஒப்பத் தொகையை அரசாணைப் பெறப்பட்ட 2014–15 அலுவலக விலைப்பட்டியலுடன் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் 3.90% முதல் 6.58% வரை குறைவாக உள்ளது. மேலும், 17.10.2015 அன்றைய சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் சந்தை விலையை விட 0.14% முதல் 0.29% வரை குறைவாக உள்ளது.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் பேருந்து சாலைகள் துறையின் மூலம் ஒப்பங்கள் ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த பணிக்காலமான 6 முதல் 9 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக்கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.

